17TH
MARCH
2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 73 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## பாசம் காட்டவில்லை அதனால் இருவரையும் கொன்றேன்!

### 15 வயது சிறுமியின் திடுக்கிடும் வாக்குமூலம்!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாஹா நகர் பகுதியில் 2 பெண்கள் கொலை

04ம் பக்கம்பார்க்க...

# கிழக்கில் தீவிரவாதக் குழுவா?

# அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க மக்கள் தயார்

- உடனடியாக விசாரணையை ஆரம்பியுங்கள்!
- ரவூப் ஹக்கீம் அரசிடம் வேண்டுகோள்!!



கிழக்கு மாகாணத்துக்கு சித்திரிக்கப்பட்டிருக்கும் தீவிரவாத குழுக்கள் என்ற செய்தி, அரசாங்கம், "பொது மக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்புவதற்காக செய்யும் ஒரு நடவடிக்கையாவெனத் தோன்றுகிறது.

ஆதலால், அரசாங்கத்துக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றிருந்தால், நேரடியாக விசாரணை

06ம் பக்கம்பார்க்க...

## படலந்த ஆணைக்குழு அறிக்கையின் படி அரசாங்கம் சட்ட நடவடிக்கை; பாராளுமன்றில் இருநாள் விவாதம்



### அமைச்சர் நளிந்த சபையில் அறிவிப்பு!

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது கதைப்பதற்கு கால தாமதம் ஆகிவிட்டதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அறிக்கையின் அடிப்படையில் அரசாங்கம்

02ம் பக்கம்பார்க்க...

## உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று முதல் ஏற்பு

### தேர்தல் தினம் 20 ல் அறிவிப்பு!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்று 17 முதல் ஏற்கப்படவுள்ளது.20 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேட்பு மனு தாக்கல் நிறைவுக்கு வரும்.

அதன் பின உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி தேர்தல் திணைக்களத்தால் அறிவிக்கப்படவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு வேட்பு மனு தாக்கல்

04ம் பக்கம்பார்க்க...

## இன்று ஆரம்பமாகிய சாதாரண தர பரீட்சை

### 474,147 பரீட்சார்த்திகள்

இன்று ஆரம்பமாகியுள்ள 2024 (2025) க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு 474,147 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

இவ்வாறு

06ம் பக்கம்பார்க்க...

## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை நிராகரிக்கும் ரணில்



பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை தான் முழுமையாக நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பட்டலந்த பகுதியில் சட்டவிரோத சித்திரவதை முகாம் நடத்திச் செல்லப்பட்டமை தொடர்பான பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பட்டிருந்தது.

இந்நிலையில்,

02ம் பக்கம்பார்க்க...



## கொலைக் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டு வர முறையான திட்டத்தை முன்னெடுக்கவும்!

### எதிர்க் கட்சித் தலைவர் அரசிடம் வேண்டுகோள்!

தேசிய பாதுகாப்பு, தற்போது இணக்கப்பாடு காணப்பட்டுள்ள சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்து, சர்வதேச நாணய நிதியத்துடன் புதிய இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம்

04ம் பக்கம்பார்க்க...

## அரசாங்கத்துக்கு காலக்கெடு விதித்துள்ள பேராயர் மல்கம் ரஞ்சித்!

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று ஏப்ரல் 21 ல் ஆறு ஆண்டு பூர்த்தியாகின்றது.

தற்போதைய அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி,பொதுத் தேர்தல்களின் போது வாக்குறுதி அளித்தது.

இன்று வரை

04ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

இது உங்கள் வங்கி Amãna Bank

# அலரி மாளிகையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு






ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் இப்தார் நிகழ்வு (14) அலரி மாளிகையில் நடைபெற்றது.

இஸ்லாமிய மதத் தலைவர்களும் ஏராளமான இஸ்லாமிய மக்களும் இதில் கலந்து கொண்டதுடன், மேலும் இஸ்லாமிய சமய நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்து இந்த நிகழ்வு நடைபெற்றது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி இந்நிகழ்வில் வரவேற்புரை



ஆற்றியதுடன், தேசிய ஒருங்கிணைப்பு பிரதி அமைச்சர் முனீர் முலாபரும் நிகழ்வில் உரையாற்றினர்.

செயிட் அப்துல்லா செஹீத் மௌலவி “ரமழான் மாதத்தின் முக்கியத்துவம்” என்ற தலைப்பில் இந்நிகழ்வில்சிறப்பு ஆன்மீக சொற்பொழிவு ஆற்றினார்.

சிறப்பு பிரார்த்தனைக்குப் பிறகு, மாலை 6.23 மணிக்கு நோன்பு திறக்கப்பட்டதுடன் அதைத் தொடர்ந்து சிறப்பு விருந்து நடைபெற்றது.

அதனையடுத்து இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்களுடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, வெளிநாட்டலுவல்கள், மேல்மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## படலந்த... இருநாள் விவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் செய்தியாளர்களிடம் இன்று தெரிவித்தார்.

வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், ஏப்ரல் 10 மற்றும் மே மாதங்களில் இரண்டு நாள் விவாதத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

“இந்த விவகாரம் தொடர்பாக ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்புவோம்,” என்று அவர் கூறினார்.

விவாதத்தை நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குழுவினர் வாதிட்டதாகவும், எனினும் விவாதத்திற்கான திகதியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாகவும் கூறினார்.

“நாட்டில் ஜனநாயகம் மற்றும் நீதிக்காக நாங்கள் விவாதத்தை நடத்துவோம். மக்கள் உண்மையை அறிய வேண்டும்,” என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பட்டலந்த சம்பவம் குறித்து முழுவதும் அறிந்தவர் முன்னாள் ஜனாதிபதி விக்கிரமசிங்க என்றும், அல் ஜசீராவின் சமீபத்திய நேர்காணலில் கேள்வியெழுப்பும் வரை அவர் அதைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

“இன்று இல்லை. கடந்த 35 ஆண்டுகளாக ரணில் இதைப் பற்றிப் பேசியிருக்கலாம். அல் ஜசீரா அதைப் பற்றிப் பேசும் வரை அவர் எதுவும் சொல்லவில்லை. ரணில் இப்போது மிகவும் காலம் தாழ்த்திவிட்டார்,” என்று அவர் கூறினார்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகும். தினமும் காலை 8.30 க்கு ஆரம்பமாகும் வேட்பு மனு தாக்கல் பிற்பகல் 4.15 க்கு நிறைவு பெறும்.நாட்டிலுள்ள மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்களில் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியும்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் தொடர்பான முக்கிய விபரங்கள் தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

அதாவது, வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகளைக் குறிப்பிடும் 11 முக்கிய விடயங்கள் இந்த அறிவிப்பில் உள்ளன.

அதன்படி, அங்கீகரிக்கப்படாத நபரால் சமர்ப்பிக்கப்பட்டாலோ அல்லது வேட்பாளர்களின் எண்ணிக்கை தேவையான தொகையுடன் பொருந்தவில்லை என்றாலோ வேட்புமனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படலாம்.

ஒரு வேட்பாளர் தனது வேட்புமனுவில் கையொப்பமிடத் தவறினால், அவர்களின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும், மேலும் எந்த மாற்றுப் பெயரும் அனுமதிக்கப்படாது.

ஒரு வேட்பாளரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால், அவர் சார்பாக வைப்பு செய்யப்பட்ட எந்தவொரு பத்திரமும் பறிமுதல் செய்யப்படும் என்பதையும் இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துகிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நாளை முதல் மார்ச் 20 ஆம் திகதி மதியம் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.


மாவட்டச் செயலக அலுவலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அவற்றை சமர்ப்பிக்கலாம், அங்கு தேர்தல் அதிகாரிகள் செயல்முறையை மேற்பார்வையிடுவார்கள்.

வேட்பாளர்கள் தங்கள் பத்திரத்தை மார்ச் 19 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதி மார்ச் 20 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கிடையில், மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டியா பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் மார்ச் 24 முதல் 27 வரை ஏற்றுக்கொள்ளப்படும், கட்டுப்பணத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மார்ச் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுமூகமான செயல்முறையை உறுதி செய்வதற்காக, தேர்தல் ஆணைக்குழு அனைத்து மாவட்டச் செயலக அலுவலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களிலும் நாளை முதல் வேட்புமனு தாக்கல் காலம் முடியும் வரை மேம்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்தும்.



# கொழும்பு நகரில் சலாம் ரமழான் கலாச்சார விழா




**(அஷ்ரப் ஏ சமட்)**

தேசிய ரமலான் பண்டிகை வாரம் சிறப்பாக கொழும்பில் 2025 மார்ச் 21 முதல் 31 வரை நடைபெற உள்ளது இன்றைய சமூகத்தில் ஓரளவு பின்தங்கியிருக்கும் மரபுகள் கலை கலாச்சாரங்கள் வெளிப்படுத்தும் சமூக நோக்கத்துடனும், முழு உலகிற்கும் தேசிய ஒற்றுமையை நிரூபிக்கும் நோக்கத்துடனும் இந்த ஆண்டு தேசிய ரமழான் பண்டிகையை "சலாம் ரமழான்" என்ற தொனிப்பொருளில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. 2025 மார்ச் 21 முதல் 31 வரை கலாச்சார விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேல் மாகாண சபையால் ஆனர் நியமிக்கப்பட்ட தேசிய ரமலான் விழாக் குழு இதை திட்டமிட்டுள்ளது டன், 2025 மார்ச் 21 முதல் 31 வரை 10 நாட்களுக்கு கொழும்பு நகரத்தை மின் விளக்குகளால் ஒளிரச் செய்யவும், இந்த தேசிய விழாவுடன் இணைந்து கொழும்பில் கிரீன் பாத் வளாகத்தில் மூன்று நாள் கலாச்சார விழாவை நடத்த ஏற்பாடுகளை செய்துள்ளன.

இந்த நிகழ்வைப் பற்றி கருத்து வெளியிட்ட தேசிய ரமழான் விழாக் குழுவின் தலைவர் ரிசான் நசீர், மற்றும் அமான் அஷ்ரப்இலங்கையின் கலாச்சார பன்முகத் தன்மையை வெளிப்படுத்தும் மற்றொரு பண்டிகையாக "சலாம் ரமலான்" விழாவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேல் மாகாண சபையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "சலாம் ரமலான்" விழா, முஸ்லிம் மக்களின் பல்வேறு பாரம்பரிய மற்றும் கலாச்சார விழுமியங்கள் பற்றிய அடிப்படை புரிதலையும் அறிவையும் மேம்படுத்தும் ஒரு தனித்துவமான விழாவாகும்.இந்த விழாவின் மூலம், ஏனைய கலாச்சார விழாக்கள் கொண்டாடப்படுவது போன்ற, முழு சமூகத்தையும் மத ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் ஒன்றிணைத்து, அதிக சமூக பங்கேற்பு, பொருளாதார பங்கேற்பு மற்றும் மதங்களுக்கு இடையிலான புரிதலுடன் கொண்டாட தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இந்த நிகழ்வைப் பற்றி கருத்து வெளியிட்ட தேசிய ரமழான் விழாக் குழுவின் தலைவர் ரிசான் நசீர்,

ரமலான் மாதம் என்பது வெறுமனே ஒரு மாதம் மட்டுமல்ல, அது எமது பாரம்பரிய கலாச்சார நெறிமுறைகள், உணவு பழக்கவழக்கங்கள் பற்றிய பல விஷயங்கள் உள்ளடங்கியுள்ளமையினால், இதை நாம் சமூகத்தின் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும், உலகெங்கிலும் வாழும் ஆழழசள,ஆநஅழஉள, ஆயடயலள மற்றும் ஹயறழழனை டீழாசயள போன்ற முஸ்லிம் கலாச்சாரங்கள் தொடர்பான பல விஷயங்களைப் பற்றிய அறிவை சமூகத்திற்கு வழங்க நாங்கள் தயாராக உள்ளோம்" என்று சுட்டிக்காட்டினார்.

இந் நிகழ்வு பற்றி அமான் அஷ்ரப் தகவல் தருகையில்,

கொழும்பில் முஸ்லிம் இனத்திற்குள் 4 சமூகத்தினர் வாழ்கின்றனர் அவர்கள் உணவு,உடை கலாச்சார விழுமியங்களை ஏனையோரும் அறிந்து தேசிய ஐக்கியத்தை வளர்த்தெடுப்பதற்காக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் ஆலோசனையின் பேரிலும் மற்றும் மேல்மாகாண ஆளுனர் ஊடாக அமைக்கப்பட்ட இக் குழு இந்நிகழ்வினை கொழும்பில் நடத்துகின்றது. எதிர்காலத்தில் சகல இனங்களையும் இணைத்துக் கொண்டு தேசிய வைபவம் இந் நிகழ்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அமான் அஷ்ரப் தெரிவித்தார்

மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுபும் மற்றும் முஸ்லிம், மலே, போரா, மேம்மன் சமூகத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் . இவ் ஊடக மாநாடு கொழும்பு சினமன் கிரான் ஹோட்டலில் நடைபெற்றது. அத்துடன் இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அனுசரணையாளர்கள் கலந்து கொண்டனர்.

## COSMOS இன் இப்தார் நிகழ்வு



ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம், இலங்கை முஸ்லிம் அமைப்புகள் UK கவுன்சிலுடன் (COSMOS UK) இணைந்து, அண்மையில் இப்தார் நிகழ்வொன்றை நடத்தியது.


இதில் இலங்கை சமூக உறுப்பினர்கள் மற்றும் இங்கிலாந்து அரசாங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கூட்டம் குறித்து உரையாற்றிய பதில் உயர் ஸ்தானிகர், இலங்கை முஸ்லிம் சமூகத்தின் வளமான பன்முகத்தன்மை மற்றும் இலங்கை கலாச்சாரத்தில் அதன் ஆழமான செல்வாக்கு குறித்து எடுத்துரைத்தார்.

பிரிட்டன் முஸ்லிம் கவுன்சிலின் பொதுச் செயலாளர் டாக்டர் வாஜித் அக்தர், அரசாங்கத்தின் கீழ் இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கைகள் குறித்துப் பேசினார், மேலும் சுத்தமான இலங்கை போன்ற முன்முயற்சிகளை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் COSMOS UK இன் தலைவர் ஷகீர் நவாஸ் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் நாயகம் அஷ்ஷெய்க் அர்காம் நூராமித் ஆகியோர் உரையாற்றினர். அவர்கள் இருவரும் ரமழானின் ஆன்மீக மற்றும் சமூக முக்கியத்துவத்தையும், இலங்கையிலும் இங்கிலாந்திலும் உள்ள இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மதிப்புகளையும் பிரதிபலித்தனர்.

இப்தார் விருந்து இலங்கையின் பன்முக பாரம்பரியத்தைக் கொண்டாட ஒரு அர்த்தமுள்ள தளத்தை வழங்கியது, உள்ளடக்கம், இரக்கம் மற்றும் ஒற்றுமையின் மதிப்புகளை வலுப்படுத்தியது.



www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 MARCH 17 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## அரச சேவை ஆட்சேர்ப்புக்கு இனவிகிதாசாரம் பேணப்படுமா?

அரசாங்கம் புதிதாக அரச சேவைக்கு 15,341 பேரை சேர்த்துக் கொள்ள உள்ளது. இதற்கான அமைச்சரவை அனுமதி கடந்த வாரம் வழங்கப்பட்டது. நாடு வங்குரோத்து நிலைமைக்கு தள்ளப்பட்ட பின் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பது இடைநிறுத்தப்பட்டிருந்தது. இப்போது நீண்ட பரிசீலனைக்கு பின் பல்வேறு துறைகளில் இருக்கும் வெற்றிடங்களுக்காக 15,341 பேர் சேர்க்கப்பட உள்ளனர். நாட்டில் கடந்த பல வருடங்களாக அரச சேவைக்கு ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறவில்லை. இதனால் அரச சேவையை கொண்டு நடத்துவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்களுக்கான ஆட்சேர்ப்புக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரசு இத் தீர்மானத்தை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த வெற்றிடங்கள் எவ்வாறு நிரப்பப்படும் என்பது குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. கடந்த காலங்களில் அமைச்சர்களின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிலைமையை புதிய அரசு தொடரப்போவதில்லை என நம்புகின்றோம். குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு இன விகிதாசாரம் எனப்படுவது சிறந்தது. இன விகிதாசாரத்தில் திறமை அடிப்படையில் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டால் நாட்டின் சகல இனத்தவர்களுக்கும் வாய்ப்புகள் கிடைக்கும்.

அரசு இது குறித்து கவனம் செலுத்தி அரச சேவையில் ஆட்சேர்ப்பில் இன விகிதாசாரம் எனப்படுவதன் மூலம் சிறுபான்மை தமிழ் முஸ்லிம் சமூகத்தவர்களும் அரச சேவைக்கு உள்வாங்கப்படுவார்கள்.

### பாசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஊக்குவிப்பதன் முக்கியத்துவம் என்பன தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் கருத்து.

2025 வரவு செலவு திட்டத்தின் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் இன்று (15) பங்கேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மூன்று பிரதான விடயங்களில் கருத்துரைத்தார்.

**- தேசிய பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்யுங்கள்.**

பொது மக்களின் பாதுகாப்பு குறித்து நேற்றும் பேசினேன். அக்மீமன பூஸ்ஸ, தல்தென, மீகஹகிவுல, அகுனுகொலபலஸ்ஸ, வெலிவேரிய துப்பாக்கிச் சூடுச் சம்பவங்கள், மூதூரில் படுகொலை, மீண்டும் அம்பலாங்கொடையில் கொலை, கொழும்பு கிராண்ட்பாஸ ில் இரு கொலைகள் என பல சம்பங்கள் நடந்துள்ளன. பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் பெரும் பிரச்சினை காணப்படுகிறது. இதனால் நாட்டு மக்களுக்கும் சுற்றுலாத்துறைக்கும் பாதிப்பு ஏற்படும் என தெரிவித்தார்.

**- முன்னைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை வைத்துக் கொண்டும், அதன் வழியில் சென்றும் எம்மால் 2028 இல் கடனை அடைக்க முடியாது.**

சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் சர்வதேச பிணை முறி பத்திரதாரர்கள் மற்றும் இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட அரசாங்கம் தயாராகி வருகிறது. 2028 இல் எம்மால் கடனை அடைக்க முடியுமா என்பதை இது தீர்மானிக்கும். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், புதிய கடன் ஸ்திரப்படுத்தல் திட்டத்திற்குச் செல்வதாகவும், புதிய ஐஆகு திட்டத்திற்குச் செல்வதாகவும் கூறியது. கடந்த அரசாங்கம் செய்துகொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடு நாட்டுக்கு பல பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளன. தற்போதைய அரசாங்கமும் முன்னைய அரசாங்கத்தின் கொள்கையிலேயே செயற்படுகின்றது. எமது நாடு நிலையான கடன் சுழற்சியில் இல்லை. வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பில் ஆராய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

**- வெளிநாட்டு முதலீடுகளையும் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

ஒரு நாடாக நாம் வெளிவள சூழல் தொடர்பில் போதிய கவனம் செலுத்துவதில்லை. சேவைகள் மற்றும் பொருட்களின் இலவச பரிமாற்றக் கொள்கை உலக வர்த்தக ஒழுங்கில் முக்கிய அம்சங்களாக மாறியுள்ளன. உலகில் தற்போது வர்த்தகத்தின் அடிப்படையில் வரிப் போர் நடந்து வருகிறது. இந்த வரிப் போரில் நமது நாடு பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியுள்ளது. இந்த ஏற்றுமதி பரப்பை விரிவாக்க முடியாமல் போயுள்ளது. எனவே ஏற்றுமதி பரப்பை ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா என விரிவாக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

### பட்டலந்த... அறிக்கையை நிராகரிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

“1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜேவிபி நாடு முழுவதும் பயங்கரவாதத்தை விதைக்க வேலை செய்தது.

அந்த நேரத்தில், நாட்டின் முக்கிய இடங்களைப் பாதுகாக்கும் அதிகாரத்தை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன மைச்சரவை அமைச்சர்களிடம் ஒப்படைத்தார்.

பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், டீசல் மின் உற்பத்தி நிலையம், மகாவலியிலிருந்து கொழும்புக்கு மின்சாரம் வழங்கும் மையம் மற்றும் வணிக மண்டலம் போன்ற பல பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இருந்தன. அந்தப் பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்ய இராணுவம் வரவழைக்கப்பட்டது.”

பாதுகாப்புப் படையினர் தங்குவதற்காக இலங்கை உர உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பல கைவிடப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வீடுகளை வழங்க முடிவு செய்யப்பட்டது.

அந்த நேரத்தில், இலங்கை மின்சார சபையின் பல அதிகாரிகள் ஏற்கனவே அங்கு பல வீடுகளில் வசித்து வந்தனர்.

இந்த பயங்கரவாத காலகட்டத்தில், சபுகஸ்கந்த பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார்.

அந்த நேரத்தில், பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன என்னை தொடர்புகொண்டு, வீட்டு வளாகத்தில் உள்ள காலியாக உள்ள வீடுகளை இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பாதுகாப்பிற்காக வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதன்படி, சம்பந்தப்பட்ட வீடுகளை களனி பொலிஸ் கண்காணிப்பாளர் நளின் தெல்கொடவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதற்கிடையில், ஒரு மாகாண சபை உறுப்பினர், ஒரு கூட்டுறவு சங்கத் தலைவர் மற்றும் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் உட்பட பல நபர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அதே நேரத்தில், மற்றொரு மாகாண சபை உறுப்பினரின் வீட்டின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதிகாரத்தில் இருந்த அரசாங்கம், நாட்டில் அமைதியையும் தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்த அதே வேளையில், வீழ்ச்சியடைந்த மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கவும், பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும் பாடுபட்டது.

1994ஆம் ஆண்டுக்குப் பிறகு, பட்டலந்த பகுதியில் சித்திரவதைகள் நடந்ததா என்பதை விசாரிக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆணையம் ஒன்றை அமைத்தார். அதற்குப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

நான் சாட்சியாக மட்டுமே அழைக்கப்பட்டேன்.

அந்த நேரத்தில், நான் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன். முழுமையான அரசியல் சேற்றைப் பரப்பும் நோக்கத்துடன் பட்டலந்த ஆணையம் நியமிக்கப்பட்டது. ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

ஒரு அமைச்சராக, பொலிஸ் கண்காணிப்பாளர், பொலிஸ் அதிகாரிகளுக்கு வீட்டுவசதி வழங்குவது முறையல்ல என்று அறிக்கையில் உள்ள முடிவுகள் கூறுகின்றன.

வீடுகளை பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைத்து, அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும் என கூறப்பட்டது.

இந்தச் செயலுக்கு நளின் தெல்கொடாவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைய அறிக்கை கூறுகிறது.

ஆணையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற குற்றச்சாட்டுகள் எதுவும் எனக்குப் பொருந்தாது.

ஆணைக்குழுவின் அறிக்கையின் இறுதி அவதானிப்புகள் 1988-90 காலப்பகுதியில் ஜேவிபி செய்த ஏராளமான பயங்கரவாதச் செயல்களைக் குறிப்பிடுகின்றன. அதன் பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம், ஜேவிபி செய்த கொடூரமான பயங்கரவாதச் செயல்களை விரிவாக விவரிக்கிறது. முழு வரலாறும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர, வேறு எந்த குற்றச்சாட்டுகளும் எனக்குப் பொருந்தாது. அந்த அறிக்கையை நான் முழுமையாக நிராகரிக்கிறேன்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மறைத்ததாக யாரும் குற்றம் சாட்ட முடியாது. கடந்த 2000ஆம் ஆண்டு நாடாளுமன்ற அமர்வின் போது அறிக்கையாக கிடைத்திருந்தது. ஆனால் யாரும் அதைப் பற்றி விவாதிக்கக் கேட்கவில்லை.

குறைந்தபட்சம் ஜேவிபி அப்படி ஒரு கோரிக்கையை வைக்கவில்லை. பலர் அந்த அறிக்கையை ஏற்கவில்லை. எனவே, நாடாளுமன்றத்தில் அதைப் பற்றி விவாதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசியல் கட்சியும் இந்த அறிக்கையின் மூலம் குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெற முயன்றதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும், இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அறிக்கையை விவாதிக்கும் பாரம்பரியம் இந்த நாட்டிலோ அல்லது பிற நாடாளுமன்றங்களிலோ இல்லை” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அரசாங்கத்துக்கு...

(01ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. ஏப்ரல் 21 க்குள் அரசாங்கம் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இன்றேல் அரசுக்கெதிராக வீதியில் இறங்கி போராட வேண்டி வரும் என கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் சனிக்கிழமை (15) நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

நாட்டில் ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், மக்கள் சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கும், நாட்டில் புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகத் தான், நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தோம்.

இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி, தேர்தல்களின்போது வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளே 1948 ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைவர்கள் எமது நாட்டில் செய்து வருகின்றனர்.

ஆகவே, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். விசேடமாக ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றுக்கு தடையாக இருக்காதீர்கள். இந்த கலாச்சாரத்தை நிறுத்திவிடுங்கள். இலங்கையில், புதிய சிந்தனைகள், புதிய புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகவே நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை கொடுத்தோம்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாதென்றும், இவ்விடயம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், எவருடனும் ‘டீல்’ போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு தற்போது ஆட்சியுள்ள அரசாங்கம் விரைந்து செயற்படுவது அவசியம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை பெற்று பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அவ்வாறு எமக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம். ஆட்சிபீடம் ஏறியதன் பின்னர் கட்டுவப்பிட்டிக்கு வந்து மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு தவறாதீர்கள் என்றார்.

### பாசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இரு பெண்களை வெட்டிக் கொலை தொடர்பில் 15 வயதான சிறுமி குறித்த கொலையைச் செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளார்.

அதன்படி திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாஹா நகர் பகுதியில் இரு பெண்களை வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டில் பேத்தியான 15 வயது சிறுமியை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

மூதூர் - தாஹா நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்றுமுன்தினம் (14) அதிகாலை சகோதரிகளான பெண்கள் இருவர் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி. தஸ்னீம் பௌசான், சட்ட வைத்திய அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் விஜயம் மேற்கொண்டு விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சம்பவத்தில் 68 வயதான சிறிதரன் ராஜேஸ்வரி, 74 வயதான சக்திவேல் ராஜகுமாரி ஆகிய இரு பெண்களே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மூதூர் தாஹா நகர் பகுதியைச் சேர்ந்த குடும்ப நல மருத்துவமாதாக கடமையாற்றிவரும் சிறிதரன் தர்ஷ ினி என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் இடம்பெற்ற தினம் அதிகாலை சிறிதரன் தர்ஷ ினி மூதூர் வைத்தியசாலையில் வியாழக்கிழமை இரவுக் கடமைக்காக சென்றிருந்த நிலையில் குறித்த வீட்டில் 15 வயதான அவரது மகள், தாயாரான சிறிதரன் ராஜேஸ்வரி மற்றும் பெரியம்மாவான சக்திவேல் ராஜகுமாரி ஆகியோர் மாத்திரம் வீட்டில் இருந்துள்ளனர்.

இந்நிலையில் அதிகாலை வேளை குறித்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த படுகொலைச் சம்பவத்தின்போது கூரிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதில் இருவருடைய கழுத்துப் பகுதிகளில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டு இருவரும் உயிரிழந்த நிலையில் 15 வயதான மகள் சிறு காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இதன்போது குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் குறித்த சிறுமியிடம் பொலிஸார் மேற்கொண்ட நீண்ட நேர விசாரணையின் பின்னர் குறித்த சிறுமி தானே கொலையைச் செய்ததாக ஒப்புக் கொண்டுள்ளார்.

அம்மம்மா தன்னைத் திட்டுவதாகவும், தன்னில் பாசம் காட்டுவதில்லை எனவும் மன அழுத்தம் காரணமாக இருவரையும் கொலை செய்ததாகவும் பொலிஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதன் பின்னர் குறித்த சிறுமி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முஸ்லிம் மீடியா போரம், ஈரான் கலாச்சார நிலையம் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வு







(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் , ஈரான் கலாச்சார நிலையமும் இணைந்து 3வது ஆண்டாகவும் சர்வதேச மகளிர் தினத்தினை 10.03.2025 கொழும்பில் உள்ள ஈரான் கலாச்சார நிலையத்தில் போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது முன்னாள் ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் புர்கான் பீ. இப்திகார் அகல் விளக்கு என்னும் நூல் வெளியீடு நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஈரான் கலாச்சார நிலையத்தின் கவுன்சிலர் கலாநிதி மொசாமி குட்ரைஸ், பிரதம பேச்சாளர் ஆலிமா வைத்தியர் மரீனா தாஹா ரிபாய் கலந்து கொண்டு உரையாற்றினார்கள் அத்துடன் ஈரான் நாட்டின் குடும்ப பெண்கள் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் கலாநிதி செயினப் ரெஸ்டிகார் பனாஹ் சூம் வழியாக ஈரானில் இருந்து உரையாற்றினார். நூலின் முதல் பிரதியை ஹாஜியானி சஹரியா பஹார்டீன் மற்றும் பலரும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வைத்தியர் மரினா றிபாய்- இந்த உலகில் வாழும் சகலருக்கும் சிறந்த வாழ்க்கை முறை பெண்களுக்கான சீரான வாழ்க்கை முறை அவர்கள் கலை, கலாச்சாரம் திருமணம், போன்ற சகலத்துக்கும் அல் குர்ஆன், ஹதீஸ் வழிகாட்டி உள்ளது. சகல மொழிகளிலும் குர்ஆன் மொழிபெயர்ப்பு சகல நாடுகளிலும் உள்ளன அவை பெற்று வாசித்து இஸ்லாமிய அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

உலகில் 115 வருடங்களாக உலக பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. 1909 ல் முதன் முதலாக பெண்கள் தினம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இஸ்லாம் மதம் பெண்களுக்கான சகல உரிமைகளையும் 1450 வருடங்களுக்கு முன்பே வழங்கியுள்ளது. ஆண்களை விட 12 உரிமைகளை மேலதிகமாக பெண்களுக்கு வழங்கியுள்ளது. அவர்களுக்கு கல்வி உரிமை, திருமண உரிமை, தொழில் செய்யும், உரிமை, போன்ற பல உரிமைகள் பெண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது. அத்துடன் ஆண் தமது பெண், குழந்தைகள் தாய், சகோதரிகளை கண்காணிப்பதும் கடமையாகும்.. பலவந்தமாக பெண்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. எனவும் உரையாற்றினார்.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

**முஸ்லிமாக அன்றி மரணிக்க வேண்டாம்**

நம்மக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்பட வேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் இறந்துவிட வேண்டாம் (2:102)

நரக கிடங்கின் அருகில்

மேலும் நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய (வேதம் என்னும்) கயிற்றை பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு நீங்கள் பிரிந்திட வேண்டாம். உங்கள் மீது அல்லாஹ் புரிந்திருக்கும் அருளை நினைத்துப் பாருங்கள. நீங்கள் (ஒருவருக் கொருவர்) எதிரிகளாகப் பிரிந்து இருந்த சமயத்தில் உங்கள் உள்ளங்களுக்குள் (இஸ்லாமின் மூலம்) அன்பை ஊட்டி ஒன்று சேர்த்தான். ஆகவே அல்லாஹ்வின் உருளாலே நீங்கள் சகோதரர்கள் ஆகி விட்டீர்கள். (அதற்கு முன்னர்) நீங்கள் நரக நெருப்புக் கிடங்கிற்கு அருகில் இருந்தீர்கள். அதில் இருந்தும் அவன் உங்களைக் காப்பாற்றிக் கொண்டான். நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் தன் வசனங்களை உங்களுக்கு இவ்வாறு தெளிவுபடுத்திக் காண்பிக்கிறான் (3:103)

**வெற்றியாளர்கள்**

(நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் (மனிதர்களை) சிறந்ததின் பக்கம் அழைத்து நன்னையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கவும். இத்தகையவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள். (8:104)

அவர்கள் தங்களிடம் அல்லாஹ்வின், தெளிவான வசனங்களை வந்த பின்னரும் தங்களுக்குள் (கருத்து) வேறுபட்டு பிரிந்து போனார்களோ அவர்களைப் போல நீங்களும் ஆகிவிட வேண்டாம். இத்தகையவர்களுக்கே (மறுமையில்) மகத்தான வேதனையும் உண்டு. (3:105)

(நம்மிக்கையாளர்களே!) நீங்கள்தான் மனிதர்களில் தோன்றிய வகுப்பார் களிலெல்லாம் மிக்க மேன்மையானவர்கள் (ஏனென்றால்) நீங்கள் (மனிதர்களை) நன்மையான காரியங்களைச் (செய்யும்படி) ஏவி, பாவமான காரியங்களிலிருந்து (அவர்களை) விலக்கி மெய்யாகவே அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கின்றீர்கள். (இவ்வாறே ) வேதத்தை யுடையவர்களும் நம்பிக்கை கொண்டால் (அது) அவர்களுக்குத்தான் மிக நன்று. நம்பிக்கை கொண்டவர்களும் அவர்களில் இருந்த போதிலும் அவர்களில் பெரும் பாலானவர்கள் (நிராகரிக்கும்). (3:110)

அன்றி, அவர்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொண்டு (மனிதர்களுக்கு) நன்மையான காரியங்களை ஏவி, தீமையான காரியங்களிலிருந்து தடுத்து, நன்மையான காரியங்களை செய்ய விரைந்தும் செல்கின்றனர்). இத்தைகையவர்களும் நல்லவர்களில் உள்ளவர்களே. (3114)

**வட்டி ஒருக்கொடுமை**

நம்மக்கையாளர்களே! (அசலுக்கு அதிகமாகவும் வட்டிக்கு வட்டி போட்டும்) இரட்டித்துக் கொண்டே அதிகரிக்கக்கூடிய வட்டியை (வாங்கித்) தின்னாதீர்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து (இதனைத் தவிர்த்துக் கொண்டால்) நீங்கள் வெற்றியடைவீர்கள். (2:130)

(நரக) நெருப்பிற்குப் பயந்து கொள்ளுங்கள் அது (இறைவனுடைய இக்கட்டளையை ) நிராகரிப்பவர்களுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளது. (3:131)




## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டும் அதனைவிடுத்து, தவறான செய்தியைச் சித்திரித்து ஒட்டுமொத்த சமூகத்தையும் அவமானப்படுத்தக் வேண்டாமெனக் கேட்டுக்கொள்வதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (15) இடம்பெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் அடிப்படையில் அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத எண்ணக்கருவை உருவாக்கியிருப்பது கவலைக்குரியது. சில அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் கடந்த 10 நாட்களாக நாட்டுக்குள் ஒரு பதற்றமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகச் செயற்பட்டு வந்தன.

கல்முனையில் முஸ்லிம் இளைஞர்களை பயங்கரவாதிகளாக சித்திரித்துக் காட்டியிருந்தார்கள். அவர்கள் அடிப்படைவாதிகளாகவும், பயங்கரவாதிகளாகவும் சித்திரிக்கப்படுகின்றனர்.

கல்முனை மக்கள் அமைதியை விரும்புபவர்கள். சாய்ந்தமருதிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் தாக்குதலொன்று இடம்பெற்றிருந்தது.அந்த மக்கள்தான் அது தொடர்பான தகவல்களை வழங்கி இருந்தார்கள். அந்த மக்கள் ஒத்துழைப்பு வழங்கக்கூடியவர்கள்.

இது சமூகத்துக்கு அச்சுறுத்தலாக இருந்தால் அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுங்கள். அவ்வாறன்றி, அதனை ஊடகங்களில் தெரிவித்து ஒட்டுமொத்த மக்களையும் கஷ்டத்துக்கு உள்ளாக்காமல் உரிய நடவடிக்கை எடுங்கள்.

அங்கு எவரிமும் உண்மையில் சமய ரீதியில் தீவிரவாத கருத்துக்கள் இருந்தால், அந்த சமூகத்தில் உள்ள தலைவர்கள் அவருடன் தொடர்புகொண்டு அது குறித்து பார்க்க முடியும். அதைவிடுத்து, அவரை ஒரு தீவிரவாதியாக அடையாளப்படுத்துவதனாலும், பின்னர் தீவிரவாதியாக முடியும் என அடையாளப்படுத்துவது வதானாலும் என்ன நடக்கப்போகின்றது?

இதனால் சுற்றுலா பயணிகள்எமது நாட்டுக்கு வராமல் இருக்கப்போகிறார்கள். இது தேவையற்ற குழப்பம். அரசாங்கத்துக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றிருந்தால் நேரடியாக விசாரணை செய்யுங்கள். இதனை பொதுவாக ஊடகங்களில் தெரிவித்து தவறான செய்தியை சித்தரித்து ஒட்டுமொத்த சமூகத்தையும் அவமானப்படுத்தக் வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் தெரிவிக்கும் குழு தொடர்பில் எங்களுக்கும் பல வருடங்களாக தெரியும்.அந்த நபர் என்னைப் பற்றியும் ஊடகத்தில் கூறியுள்ளார். ஒவ்வொரு சமூகத்திலும் இவ்வாறான அடிப்படைவாத கருத்துக்கள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லா சமயத்தவர்களும் இப்படியான அடிப்படைவாத கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள். பாஸ்டர் ஒருவர் இருக்கின்றார், அவர் ஏனைய சமயங்களை அவமானப்படுத்துகின்றார்.

இவற்றிற்கு உள்நாட்டில் உள்ள சட்டங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுங்கள். அதனைவிடுத்து, தேவையற்ற குழப்பத்தை நாட்டில் ஏற்படுத்த வேண்டாம். சிங்கள ஊடகங்கள் இதனை பாரதூரமான விடயமாக்கி கதைகளை சோடித்து வன்முறையைத் தூண்ட முயற்சிக்கின்றன. வெறுப்புணர்வை உருவாக்கப்பார்க்கின்றன. எனவே இவை அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் தேசிய பாதுகாப்பில் சட்டம் ஒழுங்கை தவறவிட்டுள்ளது. அதனால் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதில் அவர்கள் மக்களுக்கு உறுதியளிக்க வேண்டும். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

பொது மக்களையும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்புவதற்காக செய்யப்படும் ஒரு விடயம்தானா கிழக்கு மாகாணத்துக்கு சித்திரிக்கப்பட்டிருக்கும் இந்த செய்தி எனக் கேட்கிறோம். நாட்டில் அமைதியை குழப்புவதற்கான ஒரே மாதிரியான விடயத்தைத்தான் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

அதனால் அரசாங்கம் இதற்காக அனைத்துக்கும் சாட்சியங்களை நிலைநிறுத்தி அதனை உறுதிப்படுத்த வேண்டும். இவர்கள் தீவிரவாதிகள் என நிரூபிப்பதற்கு சாட்சியங்கள் தேவை

ஒரு பாராளுமன்ற உறுப்பினர்கூட அவரின் சிறப்புரிமையைப் பாவித்து தீவிரவாதம், அடிப்படைவாதம் தொடர்பில் பேசுகிறார். ஆனால் வெளியில் இதைப்பற்றி பேசினால் அவர் போன்றோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

எனவே கல்முனை சம்பவம் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்க அங்குள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள்.ஆனால், அது தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத் தன்மை வாய்ந்தனவாக இருக்கவேண்டும் என்றார்.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பதாரர்களில் 398,182பாடசாலை பரீட்சார்த்திகளும் 75,968 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று (16) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பரீட்சை மண்டபத்திற்கு முன்கூட்டியே வருகை தருமாறும், தேவையற்ற பொருட்களை கொண்டு வருவதைத் தவிர்க்குமாறு பரீட்சார்த்திகளிடம் அவர் சிறப்பு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த அறிவுறுத்தல்களை மீறுவது பரீட்சை குற்றமாகக் கருதப்படும் என்றும், ஐந்து ஆண்டுகள் வரை பரீட்சைகள் எழுதுவதில் இருந்து தடை விதிக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

“வடக்குப் பகுதிகள் உட்பட நாடு முழுவதும் 3,663 பரீட்சை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தங்கள் பரீட்சை மையத்தை எளிதாக அணுக முடியும் என்பதை உறுதி செய்துள்ளோம்.

மாணவர்களின் வசதிக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்று அவர் மேலும் கூறினார்.

இரத்மலானை, தங்காலை, மாத்தறை, சிலாபம் மற்றும் சிறப்பு கல்வி பாடசாலைகளில் சிறப்பு பரீட்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூடுதலாக, கொழும்பில் உள்ள புதிய மெகசின் சிறைச்சாலை மற்றும் வட்டரேகாவில் உள்ள சுனீதா வித்யாலயம் ஆகியவற்றில் கைதிகள் மற்றும் மறுவாழ்வு பெறும் பரீட்சாத்திகளுக்கு பரீட்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையிலும் ஒரு பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.”

நாளை தேர்வு நடைபெற உள்ளதாகவும், பரீட்சைகள் திணைக்களம் இன்று திருத்தங்களுக்காக திறந்திருப்பதால், மாணவர்கள் தங்கள் நுழைவுச் சீட்டுகளை மதிப்பாய்வு செய்து ஏதேனும் சிக்கல்களை நிவர்த்தி செய்யுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனியார் பரீட்சாத்திகள் நுழைவுச் சீட்டில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இணங்கத் தவறினால் தேர்வு மையத்தில் சிக்கல்கள் ஏற்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

“கூடுதலாக, ஒவ்வொரு தேர்வரும் தேர்வு மையத்தில் செல்லுபடியாகும் அடையாள ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் தேசிய அடையாள அட்டை (NIC), கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவை அடங்கும்.

பரீட்சாத்திகளிடம் இந்த அடையாள ஆவணங்களில் ஒன்று இல்லையென்றால், அவர்கள் தேர்வு கண்காணிப்பாளர்களைத் தொடர்பு கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் வழிகாட்டுதல்களை வழங்குமாறு நாங்கள் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

இருப்பினும், தேவையான அடையாள சரிபார்ப்பை முடித்த பின்னரே முடிவுகள் வெளியிடப்படும்,” என்று அவர் மேலும் கூறினார். அத்தியாவசியப் பொருட்களைத் தவிர வேறு எந்தப் பொருட்களையும் பரீட்சை மையங்களுக்கு கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சாத்திகள் பேனா, பென்சில் மற்றும் தண்ணீர் போத்தல் மட்டுமே கொண்டு வர அனுமதிக்கப்படுகிறார்கள். கையடக்க தொலைபேசிகள், ஸ்மார்ட் கடிகாரங்கள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளன.

மேலும் அவற்றை வைத்திருப்பது கடுமையான நடவடிக்கைக்கு வழிவகுக்கும், இவ்வாறு சாதனங்களை கொண்டு வரும் நபர்கள் ஐந்து ஆண்டுகள் பரீட்சைகள் எழுதுவதில் இருந்து தடை விதிக்கப்படலாம்.” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பரீட்சை எழுதுவோருக்கு உதயத்தின் வாழ்த்துக்கள்



மனம் சோர்வாக இருக்கக் காணும் போது முதலில் அதை புரிந்துகொண்டு....

- நான் செய்வது எனக்குப் போதுமானது என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

”மற்றவர்களுடன் போட்டியிடுவதற்காக நான் படிப்பதில்லை. எனது திறமையை வெளிப்படுத்தவும் அதை காணவுமே படிக்கிறேன்” என்றும் நம்புங்கள்.

- நேர்மறையான சுய எண்ணங்களை உருவாக்குங்கள்.

உதாரணமாக.....

“நான் புத்திசாலி..“

“இந்தப் பரீட்சையில் நான் சிறப்பாக செயற்படுவேன்..“

“நான் படித்திருக்கிறேன்..“

“எனக்கு பதில்கள் தெரியும்..“

“என்னால் தைரியமாக பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியும்..“

என்று சொல்லிக் கொள்ளுங்கள்.

அன்பின் மாணவர்களே..

உங்கள் நல்ல சிந்தனையால் மட்டுமே உங்களால் வெற்றியாளராக ஆக முடியும். அதனால்

- என்னால் முடியும்...!
- நான் சாதிப்பேன்..!
- நான் தயாராக இருக்கிறேன்..!

என்ற எண்ணங்களை மனதிற்கு கொண்டுவாருங்கள்.

நீங்கள் மற்றப்பிள்ளைகளோடு உங்களை ஒப்பிடுவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மற்றப்பிள்ளைகள் எப்படிச்செய்வார்கள் என்று எண்ணுவதை விட்டு, உங்கள் திறன்கள் மீது அவதானம் செலுத்துங்கள்.

- இப்போது கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி என்னால் முடிந்தவரை முழுமையாக முயற்சி செய்ய முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

அன்பின் மாணவர்களே..!

நீங்கள் மனவுறுதியுடன் பரீட்சைக்கு முகம் கொடுக்க உங்களுக்காக பிரார்த்தனை செய்கிறோம்.

- அஸ்ஹர் அன்ஸார் -
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்



# உலகை அச்சுறுத்தும் இந்த பிரச்சினைக்கு தீர்வு தான் என்ன?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

உலகம் தற்போதைய நிலையில் மிகுந்த பதட்டத்தை சந்தித்து வரும் வேளையில் இதற்கான தீர்வு என்ன என்பதை ஆராய்ந்து முடிவு எடுப்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் இது போன்ற பிரச்சனைகளுக்கு நிரந்தரமாக தீர்வு எந்தவொரு நிலையிலும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

போர் மேகங்கள் வானத்தை வட்டமிடும் நேரத்தில் எங்கு பார்த்தாலும் போர் களச் சூழல் தான் காணப்படும் அசாதாரண நிலையை நாம் அனைவரும் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. போர் என்பது உலக அளவில் ஆன அமைதி மற்றும் வளர்ச்சியை முழுமையாக தடுத்து நிறுத்தி விடும் நிலையில் உலக தலைவர்கள் நியாயமற்ற தற்சார்பு சுய லாபம் தரும் அரசியலை முன்நோக்கி செல்லும் வகையில் தங்களை அவர்கள் வடிவமைப்பு செய்து கொள்கிறார்கள்.

உக்ரைன் – ரஷ்யா இரண்டு நாடுகள் மத்தியசம் செய்ய அமெரிக்கா பாடுபடும் சூழல் நகைப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. நேற்றை முன்தினம் சவுதி அரேபியாவில் நடைபெற்ற சமாதானம் ஒப்பந்தம் அல்லது கலந்துரையாடலில் அமெரிக்கா ரஷ்யாவை சமாதானம் ஒப்பந்தம் செய்வதற்கு வேண்டு கோள் விடுவித்து இருக்கும் நிலையில் ரஷ்யா அதனை ஏற்றுக் கொள்ள மிகவும் கடுமையான நிபந்தனைகளை வைத்து இருக்கும் நிலையில் இது சாத்தியம் இல்லை என்பதே தற்போதைய நிலையாக இருக்கிறது.இனி இந்த விஷயத்தில் ”ரஷ்யாதான் முடிவெடுக்க வேண்டும்” என்று அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

இனி இந்த நேர்மறையான முன்மொழிவை ஏற்றுக் கொள்ளும் வகையில் ரஷ்யாவை சமாதானப்படுத்துவது அமெரிக்காவின் கையில் இருக்கிறது என்று யுக்ரேன் அதிபர் வொலோதிமிர் ஸெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். யுத்தத்தை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தையைத் தொடங்க யுக்ரேன் தயாராக உள்ளது” எனக் கூறிய ரூபியோ ஒருவேளை ரஷ்யா இதை நிராகரித்தால், ”அமைதிக்குத் தடையாக யார் இருக்கிறார்கள் என்பதை துரதிர்ஷ்டவசமாக நாம் தெரிந்து கொள்வோம்” எனக் கூறினார்.”போரை நிறுத்தவும், உடனடியாக பேச்சுவார்த்தையைத் தொடங்கவும், நாங்கள் வழங்கிய ஒரு திட்டத்தை யுக்ரேன் இன்று ஏற்றுக்கொண்டது” எனவும் அவர் தெரிவித்தார்.

”நாங்கள் இந்தத் திட்டத்தை ரஷ்யா தரப்புக்கு எடுத்துச் செல்வோம். அவர்களும் அமைதியை ஆமோதிப்பார்கள் என நம்புகிறோம். இனி முடிவு அவர்கள் கையில் உள்ளது” என்றார் ரூபியோ.கடலிலும், வான் பரப்பிலும் மட்டும் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்ற ஸெலென்ஸ்கியின் முன்மொழிவைவிட இந்த 30 நாள் போர் நிறுத்த முன்மொழிவு பரந்துபட்டதாக இருக்கிறது. அதாவது அமெரிக்கா முதலில் தனக்கான லாபம் தரும் ஒப்பந்தத்தை அல்லது கடன்களை உக்ரைன் இடம் வசூல் செய்யும் வகையில் ஒப்பந்தம் செய்து விட்ட நிலையில் தான் உலக சமாதானம் ஒப்பந்தம் குறித்து பேசுகின்றது. எங்களுக்கு ரஷ்யாவுடன் நாளை பெரிய சந்திப்பு இருக்கிறது, சில சிறந்த பேச்சுவார்த்தைகள் தொடரும் என நம்புகிறோம்” என்பது டிரம்பின் கூற்றாக இருக்கிறது. யுக்ரேன் அதிபர் ஸெலன்ஸ்கியை மீண்டும் வாஷிங்டன் அழைப்பதற்கும் தான் தயாராக இருப்பதாக டிரம்ப் கூறினார்.ரஷ்யாவின் அரசு செய்தி ஊடகமான வுயளள வழங்கிய தகவல்களின்படி, வரும் சில நாட்களில் அமெரிக்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை இருக்கிறது என்பதை ரஷ்ய வெளியுறவு செய்தித் தொடர்பாளரான மரிய ஸகரோவா மறுக்கவில்லை.

இந்த நிலையில் இந்த ஒப்பந்தத்தின் படி 5 டீல்கள் அமெரிக்கா – உக்ரைன் பேச்சுவார்த்தையில் பேசப்பட்டுள்ளது. இதற்கு அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது. இதுதொடர்பாக அமெரிக்கா சார்பில் ரஷ்யாவிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படும் நிலையில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நிறுத்தம் என்பது அமலுக்கு வரும். ஆனால் இப்போது இருக்கும் மில்லியன் டாலர் கேள்வி என்பது அமெரிக்கா – உக்ரைன் பேச்சுவார்த்தையில் நடந்த டீல்களை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் ஏற்றுக்கொள்வாரா? என்பது தான்.

இரண்டாவதாக ஈரான்– அமெரிக்கா முறுவல் நிலை வலிமை அடைந்து சிக்கலான ஒரு பரிணாமத்தை அடைந்துள்ளது என்பது உலகிற்கு மிகவும் ஆபத்தான செய்தியாக உள்ளது. அமெரிக்காவின் மிரட்டல் தொனியை ஏற்று பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் ஒரு போதும் முன் வரமாட்டோம்“ என்று அந்த நாட்டின் அதிபர் மசூத் பெஷேஷ்கியான், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே நீண்டகாலமாக மோதல் உள்ளது. ஈரான் மீது அமெரிக்கா கடும் பொருளாதார தடைகளை விதித்துள்ளது. தற்போது அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் உள்ளார். இதனால் ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான மோதல் இன்னும் அதிகரிக்க தொடங்கி உள்ளது.ஏனென்றால் ஈரானுக்கும், டிரம்புக்கும் தனிப்பட்ட பஞ்சாயத்துகள் பல உள்ளன. டொனால்ட் டிரம்பை ஈரான் கொல்ல முயன்றதாக குற்றச்சாட்டுகள் உள்ளது.

அதாவது, அமெரிக்க அதிபர் தேர்தலில் டொனால்ட் டிரம்பை கொல்ல முயன்றதன் பின்னணியில் ஈரான் உள்ளதாக குற்றச்சாட்டு என்பது உள்ளது.

இப்படியான சூழலில் தான் சமீபத்தில் டொனால்ட் டிரம்ப் அளித்த பேட்டியில், “என்னை ஈரான் படுகொலை செய்ய முயன்றால் அந்த நாடு இருக்காது. மொத்தமாக ஈரான் அழிக்கப்படும். அந்த நாட்டில் ஒன்றுமே இல்லாத அளவுக்கு அழிக்கப்படும். இந்த நடவடிக்கை தொடர்பாக ஆலோசகர்களுக்கு அறிவுரைகளை வழங்கி உள்ளேன்” என்று வார்னிங் செய்தார்.

மேலும், இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் தற்போது பிரச்சனை உள்ளது. அதேவேளையில் அமெரிக்கா, இஸ்ரேல் நட்பு நாடுகளாக உள்ளன. இதனால் ஈரானுக்கு பெரும் அச்சுறுத்தல் என்பது உள்ளது. இதற்கிடையே தான் ஈரான் தொடர்ந்து தனது படையின் வலிமையை காட்டும் வகையில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறது. இதுதவிர அணு ஆயுதங்கள் தயாரிக்கும் பணியில் ஈரான் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இப்படியான சூழலில் தான் அணு ஆயுத திட்டம் தொடர்பான புதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்து டொனால்ட் டிரம்ப் சார்பில் ஈரானுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த கடிதம் என்பது ஈரானின் உயர்மட்ட தலைவர் காமேனிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் “அணுசக்தி திட்டம் தொடர்பான புதிய ஒப்பந்தத்திற்கு உடன்பட வேண்டும். இந்த பேச்சுவார்த்தையில் இணையவில்லை என்றால் ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை அமெரிக்கா தடுக்கும்“ என்று வார்னிங் செய்துள்ளார்.

இந்நிலையில் தான் ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியன், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் கோரிக்கையை புறம்தள்ளி உள்ளார். அதுமட்டுமின்றி டொனால்ட் டிரம்ப்புக்கு கடுமையான பதிலடியை கொடுத்துள்ளார். இதுதொடர்பாக ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியன் கூறுகையில், “அமெரிக்கா உத்தரவுகளை பிறப்பித்து அதன் வழியாக எங்களை மிரட்டுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் ஒருபோதும் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு போகமாட்டேன். அமெரிக்கா விரும்பியதை செய்யட்டும்“ – என்று பதிலடி கொடுத்துள்ளார்.

இதன்மூலம் ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதில் உறுதியாக உள்ளது. அதுமட்டுமின்றி அணு ஆயுதம் தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கு தயாராக இல்லை என்பதை தெளிவுப்படுத்தி உள்ளது. இதனால் வரும் நாட்களில் ஈரானுக்கு எதிரான நடவடிக்கையை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் செய்யலாம் டிரம்பும், ஈரான் தலைவர்களும் எலியும், பூனையுமாக உள்ளனர். தற்போது ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க தீவிரமாக செயல்பட்டு வரும் நிலையில் அதனை தடுப்பதற்கான பணியை டிரம்ப் தொடங்க அதிக வாய்ப்புள்ளது. அதன்படி ஈரானை தனிமைப்படுத்தும் நடவடிக்கையை டிரம்ப் கையில் எடுக்கலாம்.

ஏனென்றால் இப்போது மக்களின் பாதுகாப்பு கருதி எந்த நாடுகளும் அணு ஆயுதம் தயாரிக்க அனுமதி என்பது இல்லை. தற்போது உலகில் உள்ள நாடுகளில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளிடம் மட்டுமே அணு ஆயுதம் என்பது உள்ளது. மற்ற நாடுகளிடம் அணு ஆயுதம் என்பது இல்லை. இதன் பின்னணியில் முக்கிய காரணம் உள்ளது. அதுதான் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் (Nuclear Non - Proliferation Treaty)

இதற்கிடையில் ஹமாஸ் மற்றும் அமெரிக்க தூதர் ஆதம் போஹ்ஹல் இடையே இரண்டு முறை ரகசிய பேச்சு வார்த்தை நடந்து வருவதும் இங்கு முக்கிய அம்சங்கள் வாய்ந்த ஒன்றாக நாம் காண கூடியதாக இருக்கிறது.

இஸ்ரேல் – காசா போர் பிரச்சனைக்கு நடுவே அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இஸ்ரேலை புறக்கணித்து நேரடியாக ஹமாஸ் அமைப்புடன் பேச்சுவார்த்தையில் இறங்கி உள்ள தகவல் வெளியாகி உள்ளது. இதனை ஹமாஸ் மற்றும் அமெரிக்கா உறுதி செய்துள்ளது. அதேவேளையில் இஸ்ரேல் தரப்போ எங்களுக்கு தெரியாமல் அமெரிக்கா இந்த பேச்சுவார்த்தையில் இறங்கி உள்ளது என்று தெரிவித்துள்ளது. இதனால் டொனால்ட் டிரம்ப், இஸ்ரேல் பிரதமர்பெஞ்சமின் நிதான்யாகு இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் யாருடைய காலத்தில் இந்த பேச்சுவார்த்தை தொடங்கியது என்பதை ஹமாஸ் அமைப்பினர் கூறவில்லை. ஆனாலும் கூட தற்போது வரை ஹமாஸ் அமைப்புடன் அமெரிக்கா பேசி வருவதாக ஹமாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஹமாஸ் டொனால்ட் டிரம்ப் தரப்பு இப்போது ஹமாஸ் அமைப்புடன் பேசி வருவதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.இதற்கிடையில் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புடன் அமெரிக்கா பேசுவது பற்றி எங்களுக்கு எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இரண்டாம் கட்ட போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த பேச்சுவார்த்தை தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பிடம் இருந்து எங்களுக்கு எந்த தகவலும் அனுப்பி வைக்கப்படவில்லை. ஊடகங்கள் மூலம் தான் அமெரிக்கா – ஹமாசுடன் நேரடியாக பேசுகிறது என்பது எங்களுக்கு தெரியும்“ என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் ஹமாசுடன் நேரடியாக பேசியதை அமெரிக்காவும் உறுதி செய்துள்ளது. அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் செய்தி பிரிவு செயலாளர் கரோலின் லீவிட் கூறுகையில், பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கான சிறப்பு தூதர் ஆடம் போஹ்லர், ஹமாஸ் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார். போஹ்லருக்கு யாருடன் வேண்டுமானாலும் பேச அதிகாரம் உள்ளது. இந்த பேச்சுவார்த்தை பற்றிய விபரம் இஸ்ரேலுக்கு தெரியும்““ என்று கூறினார். தற்போது வரை காசாவில் 59 பணையக்கைதிகள் உள்ளனர். இதில் 5 பேர் அமெரிக்க குடியுரிமை கொண்டவர்.


இதில் ஒருவர் மட்டுமே உயிருடன் இருப்பதாக கூறப்படுகிறது. இப்படியான சூழலில் தான் அமெரிக்கா நேரடியாக ஹமாசுடன் பேச்சுவார்த்தையை தொடங்கி நடத்தி வருகிறது.ஹமாஸ் அமைப்பை பயங்கரவாதிகள் என்று அமெரிக்கா கடந்த 1997 ம் ஆண்டில் அறிவித்தது. தற்போது வரை ஹமாஸை பயங்கரவாதிகள் பட்டியலியே அமெரிக்கா வைத்துள்ளது. அமெரிக்காவை பொறுத்தவரை பயங்கரவாத பட்டியலில் இருக்கும் குழுவுடன் ஒருபோதும் பேச்சுவார்த்தை என்பது நடத்தப்படுவது இல்லை.

இதுதான் அமெரிக்காவின் கொள்கையாக உள்ளது. ஆனால் அந்த கொள்கையை மீறி முதல் முறையாக அமெரிக்கா, ஹமாஸ் அமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளது. அதுவும் ஹமாஸ் கட்டுப்பாட்டில் இருக்கும் காசாவில் போர் புரிந்த இஸ்ரேலை புறக்கணித்து அமெரிக்கா நேரடியாக அந்த அமைப்பினரிடம் பேசி உள்ளது.

இதனால், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும் அதிருப்தியடைந்துள்ளார். இதுபற்றி இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் அதிகாரிகள் தரப்பில் வெளிப்படையாகவே அதிருப்தி தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆக மொத்தத்தில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பதட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் இந்த தகவல்கள் அடிப்படையில் தெளிவாக தெரிந்தது கொள்ள கூடியதாக இருக்கிறது.

ஆம்... பாலஸ்தீன – இஸ்ரேல் போர் பதட்டம், உக்ரைன் – ரஷ்யா போர் மற்றும் ஈரான் – அமெரிக்கா அணு ஆயுத பேச்சுவார்த்தை பதட்டம் மற்றும் நிராகரிப்பு என்று பல்வேறு கோணங்களில் உலகம் தற்போது ஆட்டம் கண்டு வரும் சூழலில் இந்த உலகம் எப்போது தான் நிலையான அமைதியை தேர்வு செய்து பயணிக்க போகிறது என்ற கேள்விக்கு எந்தவொரு நிலையிலும் தெளிவான பதில் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.



# முஸ்லிம்களை மீண்டும் சீண்டும் இனவாதம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

இதுவரை காலமும் சிங்கள பௌத்த தீவிரவாத போக்குடைய சில இனவாதிகளாலேயே கடுமையான சவால்களும் பிரச்சினைகளும் இருந்து வந்துள்ளன. ஆனால் இப்போது புதிய ஒருவரால் பிரச்சினை ஆரம்பமாகும் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

யாழ். மாவட்ட சுயேட்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த 2025.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது இஸ்லாத்தில் நிகழும் இள வயது திருமணம் தொடர்பாக கூறிய கருத்துக்கள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் கடுமையான எதிரலைகள் உருவாகி இருக்கின்றன. இவரது கருத்துக்களை இஸ்லாத்தை கொச்சைப்படுத்துவதாகவும் இஸ்லாத்திற்கு எதிரான ஒருவிதமான மத நிந்தனை என்ற அடிப்படையிலும் முஸ்லிம்கள் நோக்குகின்றனர். இதே கருத்தை இந்து மதம் தொடர்பாக அல்லது கிறிஸ்தவ மதம் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சொல்லி இருந்தாலும் ஏனைய மதங்களும் அப்படித்தான் நோக்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. காரணம் பேச முன்னர் தாம் என்ன பேசப் போவது? பேசும் விடயம் எந்தளவிற்கு சரியானது? பேசப்படுகின்ற விடயம் ஏற்படுத்தப்படுத்தப் போகும் தாக்கம், பாதகமான விளைவுகள் யாவை என்பதை சரியாக சிந்தித்து பேச வேண்டும்.

இராமநாதன் அர்ச்சுனா யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகி பாராளுமன்றத்திற்குள் காலடி எடுத்து வைத்த நாளில் இருந்து தொடர்ச்சியாக சர்ச்சைகளே உருவாகிக் கொண்டிருக்கின்றன. முதலாம் நாள் எதிர்க்கட்சி தலைவருக்காக பாராளுமன்றத்தில் சம்பிரதாய பூர்வமாக ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அதை விட்டு எழும்ப முடியாது என்றும் சபைக்குள் கருமமாற்றும் சேவகர் ஒருவர் அருகில் வந்து அதுபற்றி அறிவுறுத்திய போது சம்பிரதாயபூர்வமாக இருக்கின்றதை மாற்றியமைக்கத்தான் தாம் பாராளுமன்றம் வந்திருப்பதாக ஒரு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் போன்று பேசினார்.

ஆனாலும் கடந்த வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின் போது தாம் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதில்லை என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் என்றும் அறிவித்துக் கொண்டார்.

அத்துடன் ஏற்கனவே எதிர்க்கட்சி அலுவலகத்திலும் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டதையும் குறிப்பிட வேண்டும்.

அதே நேரம் ஏற்கனவே பாராளுமன்றத்தில் பேசும் போது பல முறை முரண்பாடுகளுக்கு தூபம் இடும் வகையில் கருத்துக்களை முன்வைத்து வந்திருப்பதோடு சபாநாயகரை அடிக்கடி மிக மோசமான முறையில் பேசி வந்ததையும் மறந்துவிட முடியாது. அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் போக்குவரத்து சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் அநுராதபுரம் பொலீசாரினால் கைது செய்யப்பட்டு பொலீசாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற அடிப்படையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டிருந்தார். அவ்வாறே யாழ்ப்பாணத்தில் அவர் சென்ற பல இடங்களில் மக்கள் எதிர்ப்புக்கும் அதிருப்திக்கும் ஆளாகி இருக்கின்றார்.

இவ்வாறான ஒரு நிலையில் கடந்த 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் பேசும் போது இந்த நாட்டில் முஸ்லிம்கள் அவர்களுக்கென்று தனியான சட்டங்களை பின்பற்றி வருகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தில் 09 வயதுடைய பிள்ளைகளை திருமணம் செய்வதை நிறுத்த வேண்டும். இது மோசமான செயல் என்றெல்லாம் காரசாரமான முறையில் சாடினார். அத்துடன் நாட்டில் ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறாக சட்டங்கள் இருக்க முடியாது. எல்லோருக்கும் ஒரே சட்டம் இருக்க வேண்டும் என்றும் கூற முற்பட்டதை அவதானிக்க முடிந்தது. உண்மையில் அவர் ஒரு மருத்துவர். வைத்திய துறையில் கற்றுத் தேர்ந்த மருத்துவரான ஒருவர். அதே நேரம் காதிராப்பிரகாரமான முறையில் பாராளுமன்ற உறுப்பினராகி இருக்கின்றார். ஏதோ மக்கள் வாக்களித்து பாராளுமன்றத்திற்கும் அனுப்பி இருக்கின்றனர்.

ஆனாலும் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆகிவிட்டார் என்ற உடனேயே அவருக்கு இந்த உலகில் உள்ள அனைத்தும் தெரியும் என்பது அர்த்தமாகாது. அவர் இனித்தான் கற்க வேண்டி இருக்கின்றது. முதலில் அவர் எந்த இன சமூகத்திற்காக மக்கள் பிரதிநிதியாக பாராளுமன்றம் அனுப்பப்பட்டாரோ அந்த சமூகத்திற்காக குரல் எழுப்ப வேண்டும். அவர் சார்ந்த யாழ் தமிழ் சமூகம் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சிவில் யுத்தம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டு சொல்லொனா துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்த சமூகம். அவர்கள் வாழும் பிரதேசங்களில் ஏராளமான அரசியல், பொருளாதார, சமூக பிரச்சினைகள், தேவைகள் உள்ளன. குறைபாடுகள் உள்ளன. அத்தகைய மக்கள் பிரச்சினைகளை அர்ச்சுனா எம்.பி தேடிப்பார்த்து கண்டறிந்து அவர்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் பாராளுமன்றத்தில் முன்வைத்து அவற்றுக்கு தீர்வுகளை தேடிக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

அத்தகைய பிரச்சினைகளை தொகுத்து பட்டியலிட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சியால் விவாதங்களின் போது ஒதுக்கி கொடுக்கப்படுகின்ற சில நிமிட நேரங்களை அனாவசியமான முறையில் தேவையற்றவர்களை வம்புக்கு இழுத்து காலத்தை வீணடித்து பொன்னான நேரத்தை மண்ணாக்க முற்படக் கூடாது. அவ்வாறு தொடர்ச்சியாக செய்து வந்தால் வடக்கில் இருந்து தமிழ் மக்கள் அவரை பாராளுமன்ற பிரதிநிதியாக அனுப்பியதன் நோக்கமும் எதிர்பார்ப்பும் நாசமாகிப் போகலாம்.

இது அவருக்கு மட்டும் உரிய விடயம் அல்ல. பாராளுமன்றம் செல்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய விடயமாகும். பாராளுமன்றத்தில் மாதத்தில் 08 நாட்கள் நடைபெறும் அமர்வுகளின் போது சட்டமூல விவாதங்கள், திருத்தச் சட்டமூலங்கள் போன்றவற்றில் சரியான முறையில் பங்குபற்றுவது குறித்த சட்டமூலம் தொடர்பாக பூரண அறிவையும் தெளிவையும் பெற்றவராக கருத்துக்களை முன்வைத்தல் மிகவும் பொருத்தமான விடயமாகும்.

இதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் வடக்கை பிரதிநிதித்துவம் செய்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பேசி இருக்கின்ற உரைகளை ஹன்சார்ட்டில் இருந்து புரட்டி பார்த்தால் அர்ச்சுனா எம்.பி. எங்கே இருக்கின்றார், அவர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர் இன்னும் அரசியலிலும் பாராளுமன்ற விவகாரங்களிலும் கற்க வேண்டிய பாடங்கள் யாவை என்பதை புரிந்துகொள்ள முடியும்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஒருபோதும் இந்த நாட்டின் பொதுவான சட்டம், மற்றும் ஒழுங்கிற்கு மாற்றமான முறையில் நடந்து கொண்டதில்லை. அவர்கள் சட்டத்தை மதிப்பவர்கள். இலங்கை சட்டத்தை ஒருபோதும் மீறியதோ, அவமதித்து நடந்து கொண்டதோ இல்லை. நீதிமன்ற நடைமுறைகளை கௌரவமாக மதித்து நடக்கக் கூடியவர்கள். ஆனாலும் மத விவகாரங்கள் தொடர்பாக 1796 ஆம் ஆண்டு இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தர் காலம், அதன் பின்னர் பிரித்தானியர் காலம் முதல் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற இஸ்லாமிய தனியார் சட்டதிட்டங்கள் உள்ளன.

அவை முஸ்லிம்களது திருமணம், விவாகரத்து, வாரிசு உரிமை போன்ற விடயங்களில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அதற்காக ஒல்லாந்தர் அக்காலத்தில் எகிப்து, ஸ்பெய்ன் போன்ற நாடுகளுக்கு இலங்கையில் இருந்து முஸ்லிம் பிரதிநிதிகளை அனுப்பி அங்கு நடைமுறையில் கடைபிடிக்கப்படுகின்ற இஸ்லாமிய சட்டதிட்டங்களை அறிந்து வருமாறும் அவற்றில் இருந்து இலங்கை வாழ் முஸ்லிம்களது இஸ்லாமிய உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இஸ்லாமிய மத அடிப்படை மரபுகளுக்கு ஏற்ற வகையில் சிலதை அமுல்படுத்த அங்கீகாரம் வழங்கினர்.

அதன் பின்னர் பிரித்தானியர் ஆட்சியிலும் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களது மத உரிமைகளில் கைவைக்க முற்படவில்லை. தொடர்ந்தும் முஸ்லிம்களது கோரிக்கைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப இஸ்லாமிய சட்டதிட்டங்களை கடைப்பிடிக்கவும் பின்பற்றவும் அனுமதி வழங்கி இருந்தனர். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மூலம் இஸ்லாமிய தனியார் சட்டங்களை கடைபிடிக்கவும் பின்பற்றவும் இலங்கை முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப சில விடயங்களில் மாற்றங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டு வந்துள்ளன. கடந்த கோதாபய கால ஆட்சியிலும் அதற்கு முன்னர் மஹிந்த ஆட்சியிலும் அந்த ஆட்சியின் பின்புலத்தில் இருந்து செயல்பட்ட பௌத்த தீவிர சிந்தனையாளர்கள் இஸ்லாமிய தனியார் சட்டங்களை ஒழித்துக் கட்டி ஒரே நாடு ஒரே சட்டம் என்ற வரையறைக்குள் முஸ்லிம்களை அடக்கி ஒடுக்க முற்பட்டனர்.

அதன் எதிரொலியாகத்தான் பேராசிரியர் மொத்திகாவின் அறிவுரைக்கு இணங்க கொரோனா வைரஸ் தொற்று பரவிய காலங்களில் முஸ்லிம்களின் ஜனாசாக்களையும் அவர்களது விருப்பத்தின் பேரில் அடக்கம் செய்ய அனுமதிக்காமல் தகனம் செய்து நெருப்பில் எரிக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தனர். இறுதியில் இரண்டு வருடத்தில் ஜனாதிபதி பதவியை விட்டு விட்டு கோதாபய நாட்டை விட்டு ஓடும் நிலை ஏற்பட்டது. அதே போன்று அதே இனவாதிகளுக்குப் பால் வார்த்து அவர்களது கைப்பொம்மைகளாக இருந்த அப்போதைய பிரதமர் மஹிந்தவும் பதவி துறக்க வேண்டி ஏற்பட்டது. இறுதியில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில் 67 இலட்சம் வாக்குகளுக்கு உரிமை கோரிய அரசியல் கட்சியான பொதுஜன பெரமுன கட்சி மிகவும் அடிமட்ட நிலைக்கு தள்ளப்பட்டு ஒரே ஒரு போனஸ் ஆசனத்தால் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றம் வரும் நிலை உருவாகியது.

இவ்வாறிருக்க அர்ச்சுனா எம்.பி கூறிய விடயம் இலங்கை வாழ் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் சனத்தொகையில் எல்லா ஆண்களும் 09 வயது பெண் பிள்ளைகளைத்தான் திருமணம் முடிப்பது போன்று பேசினார். இவ்வாறான இளவயது திருமணங்கள் தேடிப்பார்த்தால் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் என்று எல்லா மதங்களுக்குள்ளும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன.

ஆனாலும் பரவலாக அல்ல. ஆங்காங்கே ஒன்று அல்லது இரண்டாக இருக்கலாம். அதே நேரம் பெண் பிள்ளைகள் பருவ வயதை அடையும் பருவம் எதுவோ அதன் பின்னர் அந்த குடும்பத்தார் கருதும் போது திருமணம் முடித்து கொடுக்க முடியும். ஆனாலும் சர்வதேச மனித உரிமைகள் சாசனம் மற்றும் சிறுவர், பெண்கள் பாதுகாப்புக்கான சட்டங்கள் இத்தகைய பெண் பிள்ளைகளது சுகாதார, பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய விடயங்களில் கவனம் செலுத்தியே திருமண வயதை சட்டரீதியான வயதாக நிர்ணயம் செய்து வைத்திருக்கின்றது. அவ்வாறே இஸ்லாம் மதத்திலும் அரசாங்க சட்டங்கள் எதுவோ அதனை மீறாமல் திருமண விடயங்களும் நடைபெற்று வருகின்றன.

ஆதலால் அர்ச்சுனா எம்.பி, அது தொடர்பான போதுமான அறிவும் தெளிவும் இல்லாமல் வாய்க்கு வந்தபடி பாராளுமன்றத்தில் உளறினார் என்றே கூற வேண்டும். அத்துடன் அவர் எப்போது பேச எழும்பினாலும் நிதானம், அமைதி, தெளிவு எதையும் காண முடிவதில்லை. பதற்றம், குழப்பம், அமைதியின்மையே காணப்படுகின்றது. அதனால் அத்தகைய நிலைமைகளை மாற்றயமைத்துக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நிலன் திருச் செல்வம், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இரா. சம்பந்தன், யோசொப் பரராஜசிங்கம், எஸ். செல்வராசா போன்றவர்களின் உரைகளை பாராளுமன்ற ஒலிப்பதிவு நூலகத்தில் இருந்து எடுத்து கேட்டால் எந்தளவிற்கு பொறுமையும் நிதானமும் தெளிவும் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு அவசியம் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

இதே வேலையை தான் கலபொட அத்தே ஞானசார தேரரும் செய்து வருகின்றார். அவர் கடந்த வாரம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் "நான் பலமுறை பாராளுமன்றம் போக முயற்சி செய்தது அங்கு போனால் சிறப்புரிமை இருக்கின்றது. இஸ்லாம் மதம் பற்றி பேச வேண்டிய எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை பாராளுமன்றத்தில் சிறப்புரிமையை பயன்படுத்தி பேசலாம்.

ஆனால் வெளியில் பேச முடியாது. பேசியதால் தான் இப்போது நீதிமன்றம் என்று அலைய வேண்டி இருக்கின்றது" என்றார்.

இதில் இருந்து பாராளுமன்ற சிறப்புரிமை என்பது வாய்க்கு வந்ததையெல்லாம் உளரி கொட்டித் தீர்ப்பதற்கான ஆயுதம் என்று கருதுகின்றார். அதைத்தான் அர்ச்சுனாவும் செய்தார்.

ஆனால் பாராளுமன்ற சிறப்புரிமை என்பது ஏனைய மதங்களை, இனத்தவர்களை அவதூறாக, வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் பேசி நிந்தனை செய்வதற்கான ஆயுதம் அல்ல. அது மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து மக்கள் பிரதிநிதி என்ற வகையில் ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் கூறி தீர்வுகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கத்தை வலியுறுத்தச் செய்வதற்கான ஆயுதம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.



# கடந்த அரசாங்கத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள "ஹெட ஓயா" திட்டத்தினை பூர்த்தி செய்து அம்பாறை, மொனராகலை மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுங்கள்!

## அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை

(கே எ ஹமீட்)

கடந்த அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ள "ஹெட ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தினை பூர்த்தி செய்து அம்பாறை, மொனராகலை மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரியுங்கள் என விவசாய, நீர்ப்பாசன, காணி, கால்நடை அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த அரசாங்க காலத்தில் நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சினால் "ஹெட ஓயா" நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பான அமைச்சரவை தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டம் தொடர்பான புவியியல் கள ஆய்வு மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளைப் பெற்ற நிலையில் இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை நிறைவு செய்யுமாறு அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடி "ஹெட ஓயா" நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதாக தீர்மானம் எடுத்தோம். கௌரவ பிரதி அமைச்சர் வசந்த பீரிஸ் அவர்களும் இது தொடர்பான விடயங்களில் ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்தார்.

எனவே, கௌரவ நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்த் அவர்கள் அம்பாறை, மொனராகலை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து "ஹெட ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட மக்கள் சார்பில் கேட்டுக்கொண்டார்.

கல்லோயா நீர்ப்பாசனத் திட்டத்தினால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் உச்சகட்ட நெல் விளைச்சலினை வழங்கி வந்த 8500 ஏக்கர் காணிகள் நீண்ட காலமாக நீரில் மூழ்கி கிடக்கின்றன.



எனவே, தில்லையாறு, சம்புக்களப்பு திட்டத்தினை மேற்கொள்வதற்கான விசேட ஏற்பாடுகளை நீர்ப்பாசன அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

தில்லையாறு, சம்புக்களப்பு திட்டத்திற்காக உலக வங்கித் திட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் 30 மில்லியன் நிதி செலுத்தப்பட்டும் இதுவரையும் நீர்ப்பாசனத் திணைக்களம் அந்நிதியை பயன்படுத்தி தில்லையாறு சம்புக்களப்பு ஆழமாக்கும் திட்டத்தினை நிறைவேற்றவில்லை.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர்கள்,பிரதேச சபை செயலாளர்கள், விவசாய அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்குவதற்கு தயாரான நிலையிலும் நீர்ப்பாசனத் திணைக்களம் இந்த விடயத்தினை இழுத்தடிப்பு செய்து வருகின்றது.

இதனால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் வெள்ளம் நிலவும் காலங்களில் நஷ்டமடைந்து வருகின்றனர்.

எனவே, தில்லையாறு, சம்புக்களப்பு திட்டத்திற்கு உலக வங்கியினால் ஒதுக்கப்பட்ட நிதியினை பயன்படுத்தும் நடவடிக்கையினை நீர்ப்பாசன அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

வெள்ள காலத்தில் கழியோடை பிரதான வாய்க்கால் உடைந்து போவதும், நீர்ப்பாசனத் திணைக்களம் தற்காலிகமான ஏற்பாடுகளை செய்வதுமாக கழியோடையின் நான்கு கிலோமீட்டர் பிரதான வாய்க்காலின் நிலைமை உள்ளது. இதனால் கோடிக்கணக்கான நஷ்டங்கள் பிரதேச விவசாயிகளுக்கு ஏற்படுவதுடன், அரசாங்க நிதியும் ஒவ்வொரு வெள்ள காலத்திலும் வீணாக செலவு செய்யும் நிலைமை தொடர்கின்றது.

எனவே, தீகவாபி கழியோடை நான்கு கிலோமீட்டர் பிரதான வாய்க்காலுக்கான நிரந்தர தீர்வை நீர்ப்பாசன அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என மக்கள் சார்பில் கேட்டுக்கொண்டார்.

இதே நிலைமைதான் இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள நெய்னாகாடு (ஆஸ்பத்திரி சேனை வட்ட) சுடீ பிரதான வாய்க்கால் ஒவ்வொரு வருடத்திலும் உடைந்து போவதால் சம்மாந்துறை, நிந்தவூர் பிரதேச மக்களின் ஆயிரக்கணக்கான நெற் காணிகள் நஷ்டமடைவதுடன், சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 42 ஆயிரம் பேருக்கான நீர் இணைப்புக்களும் அடிக்கடி துண்டிக்கப்படுகின்றன.

எனவே, இதற்கான நிரந்தர தீர்வினையும் நீர்ப்பாசன அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# அனுராதபுரம் சாஹிராவுக்கு ஸ்மார்ட் போர்ட் அன்பளிப்பு



அனுராதபுரம் ஸாஹிரா கல்லூரிக்கு DRAGON Foundation அமைப்பின் சார்பில் மாணவர்களின் நவீன கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையில் அமைப்பின் பழைய மாணவர் வைத்தியர் ஏ.எம்.பர்ஷான் அவர்களின் தலைமையில் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க Smart Board (85") அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் இடம் வழங்கி வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படம் :- எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

# அனுராதபுரம் சாஹிரா இப்தார் நிகழ்வில் ஆளுனர் பங்கேற்பு





(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாசவின் பங்கேற்புடன் நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்வு அனுராதபுரம் ஸாஹிரா கல்லூரி வளாகத்தில் அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் தலைமையில் (14) இடம்பெற்றது.

இதன் போது ஆளுநர் பாடசாலை அதிதிகள் பதிவேட்டில் கையொப்பம் இடுவதையும் நோன்பு திறப்பதில் கலந்து கொண்டோரயும் காணலாம்.

# புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் மேலும் ஒரு மாணவன் சித்தி

(கற்பிட்டி செய்தியாளர்
எம் எச் எம் சியாஜ்)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் மீளாய்வு வெளியாகியுள்ள நிலையில் புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் மேலும் ஒரு மாணவன் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்.

முஹம்மது முபீக் மிர்சால் அஹமட் என்ற மாணவன் 2024 ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையின் மீளாய்வு பெறுபேற்றின் மூலம் 138 புள்ளிகளை பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம் எம் ஹூதைபா தெரிவித்துள்ளார்.

2024 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஏற்கனவே எட்டு மாணவர்கள் சித்தியடைந்திருந்த நிலையில் இந்த மாணவனின் சித்தியுடன் புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையில் ஒன்பது மாணவர்கள் வெட்டு புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது



# புத்தளம் மாவட்டத்தில் 04 உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்டுப் பணம் செலுத்தியது

(கற்பிட்டி செய்தியாளர்
எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் மாநகர சபை, கற்பிட்டி பிரதேச சபை, வண்ணாத்திவில்லு பிரதேச சபை மற்றும் புத்தளம் பிரதேச சபை ஆகிய 04 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரச் சின்னத்தில் தனித்து போட்டியிட தீர்மானித்துள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் புத்தளம் மாநகர சபை தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிடும் ரணீஸ் பதுர்தீன் புத்தளம் மாவட்ட செயலகத்தில் இதற்கான கட்டுப்பணத்தை செலுத்தினார்.





நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் மிகவும் பலம் வாய்ந்த அணியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அணி அமையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண்களுக்கான இலவச சுயதொழில் பயிற்சி நெறி ஆரம்பம்





(கற்பிட்டி செய்தியாளர்
எம் எச் எம் சியாஜ்)


கற்பிட்டியில் பெண்களுக்கான இலவச ஒரு வருட சுயதொழில் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கற்பிட்டி செடோ நெனசல காரியாலயத்தில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ஜீ எஸ்.ஏ அபே றுவான் தலைமையில் இடம்பெற்றது

வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் கற்பிட்டி செடோ நெனசலவின் ஏற்பாட்டில் இடம்பெற உள்ள பெண்களுக்கான ஒரு வருட இவ் இலவச சுயதொழில் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கற்பிட்டி பிரதேச பெண்கள் அபிவிருத்திச் உத்தியோகத்தர் ஜே.பீ சாந்திலதா, மாகாண பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வாயிஷா, இளைஞர் விவகார பொறுப்பதிகாரியும் செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான ஏ.ஆர் முனாஸ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் எஸ் நிஸ்வர், கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சமாதானம் தொடர்பான உத்தியோகத்தர் திருமதி டிஸ்னா மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சிகளை முதன் முதலாக ஆரம்பித்து தொடர்ந்து செயற்பட்டு வரும் முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.கே ஆப்தீன் (அலாவுதீன்) ஆகியோரின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது

இப் பயிற்சி நெறியின் முதலாவது பயிற்சி வகுப்பு புதன்கிழமை (12) ஆரம்பிக்கபடுவதுடன் இப் பயிற்சி நெறியில் 22 வகையான உற்பத்திகள் பற்றிய பயிற்சி இடம்பெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




நாச்சியாதீவு
பர்வீன்



# மானுடவிமுத்தி நோக்கிய எழுத்து கண்டு...

"அயல்வீட்டுப் பீர்க்கங்கொடி" என்ற தலைப்பில் ஒரு கவிதையை வாசிக்கிறேன். கிண்ணியா எஸ். பாயிஸா அலி எழுதியிருக்கும் கவிதை.

இயற்கையுடன் என்றைக்குமேயான, சற்றும் அறுந்து சிதையாத பந்தத்தைப் பேணுமொரு பெண்ணாக பாயிஸாவின் ஆன்ம தரிசனம் இதிலும் காணக் கிடைக்கிறது.அவரது மென் இதயத்துள் மானுடவாதத்தின் எல்லாவகைத் தீரா அன்பும்,அதன் சாயலுமே எப்போதுமேவி இருக்கக் காணக் கிடைக்கிறது.

ஒரு விஞ்ஞானஆசிரியையாயிருப்பது மட்டும் இவ்வகையான அன்பு மிகு எண்ணங்களை, சிந்தனைகளை உணர்வுகளை சமாஜத்துள் நுழைக்க போதும் என்று நினைக்கவில்லை ஒருபோதும் நான். ஒரு இலக்கியக் காரியாக நாம் வாழுமிச் சமுதாயத்தின் ஜவாப்தாரியாக தன் நிர்மாணிப்புகளுக்கு நல்ல உயிரோட்டம் தருகிறார் அவர். அது உண்மையில் மா பேறு.

அந்தரத்தில் நடனமிடும்
பச்சைத் தேவதையாயும்
அணில் பிள்ளைகள்
ஆடிமகிழும்
ஊஞ்சலாயும்..
பூபிஞ்சும் தந்துக் கரங்களுமாய்
மிகமென்மையாய் நடை பயிலுது
அயல்வீட்டுப் பீர்க்கங்கொடி.

ஜன்னல் திறந்ததுமே
புன்னகைக்கும்
அதனுடனான என் சிநேகிதம்
அண்மையானதும்
மிக ஆழமானதுங்கூட.

என்னைப் போலவே
தினமதுவும்
மதியஉணவு சமைக்கிறது..
ஆனாலும்
காற்று வெளியை
அது கார்பன் மயமாக்கு
வதில்லை.

நம் கழிவுக் காற்றையே
தன் அடுப்பு விறகாக்கித்
தூயகுளிர் காற்றால்
முற்றம் நிரப்புகிறது.

கொத்தான அதன் மஞ்சள் பூக்களிலே
எழுதி வைத்திருக்கிறது
பலநூறு கவிதைகள்.

தூக்கணாங் குருவிக்கூடு போலே
தொங்குமதன்
காயைக் காண்கையிலே
ஞாபகச்சுவரை
முட்டி மோதிக்கொண்டே
நாவூறச் செய்கிறது...
கடுகும் சின்னவெங்காயமும்
தாளித்த மணம்
கூரைக்கு மேலாயும் வழிந்தோட
வற்றாளையும் வெள்ளிறாலும்..
சேர்த்தாக்கிய
உம்மும்மாவின்
பீர்க்க்கங்காய் பால்கறிதான்.

காற்றுவெளியை கார்பன் மயமாக்காத நல்ல பீர்க்கங்கொடி போலவே, வெகு மிருதுவான எழுத்துகள் பாயிஸாவுக்கு. ஆசிரியையாய் தன் வகுப்பறைகளுக்கு அப்பாலும் பார்க்க முடிகின்ற நீள்கண்கள் கொண்ட பெண்ணின்

பத்தி எழுத்துகளின் தொகுப்பு என் கையில் கிடைக்கிறது சமீபத்தில்.

"வகுப்பறைக்கு வெளியே.." கிண்ணியா எஸ். பாயிஸா அலி எழுதியிருக்கும் 133 பக்கங்கள் கொண்ட பத்திவகைக் கட்டுரைத் தொகுப்புப் புத்தகம். மூதூர் துஆஜ வெளியீட்டு நிறுவனம்,2024 ஆண்டிலதை அச்சிட்டு வழங்கியுள்ளது.

நிரந்தரமற்ற இந்தச் சமுதாயத்துக்குள்ளும் நிரந்தரமாய்த் தன் நினைவுகளை விட்டுச் சென்றிருக்கும், நல் முத்திரைகள் பதித்துச் சென்றிருக்கும் பெறுமதிமிக்க மானுடர்கள் பற்றிய நினைவுகளைத் தலைமைப்படுத்தும் அழகான எழுத்து.

ஒரு சமூக நல்லிணக்கவாதியாகவே வாழ்ந்து மறைந்த கிழக்கிலங்கையின் அரசியல் பெரு ஆளுமை அப்துல் மஜீத் அவர்கள் பற்றியது இதில் முதல் கட்டுரை.இந்தச்சமூகத்திற்காய் அவர் தாங்கிய மகோன்னத பாத்திரம் பற்றி பலதும் சொல்லித் தருகிறது என்ற வகையில் இது ஒரு வரலாற்று நூல் போலவும் காட்சி தருகிறது.

போலவே,திருமிகு சலாம் என்பவர்பற்றிஅவர் சுமந்தஆசிரியம் பற்றி,கிண்ணியாவின்முதல் பெண் விஞ்ஞானப் பட்டதாரி, ஜெஷீலாம்மா பற்றி,ஹஸன் மௌலவி மாமா பற்றி என்று நிறைய தகவல்கள் சொல்கிறது நூல்..

### அவரை நல்ல விதமாய்பாதித்த ஆளுமைகள்

பற்றிசொன்ன பாயிஸா அலி, ஒரு விஞ்ஞான ஆசிரியையாய் தொழில் ரீதியான தனது அனுபவங்கள் பலதையும் இடையிடையே கோர்த்து தருகிறார். "கொரோனாக் கால அதிர்வுகள் அவை இரண்டிலிருந்தும் வேறு பட்டு வேறொரு வகையில் பேசுகிறது. வேறொரு அனுபவத்தை சொல்கிறது..

எளிய அழகிய மொழி உண்டு பாயிஸா அலி இடத்து. தான் வகுப்பறைக்குள் சந்திக்கின்ற பிள்ளைகள் பற்றி, அவர்தம் பெற்றோர்கள் பற்றி நிறைந்த கரிசனையும்,கவனமுமன்பும், பிரார்த்தனைகளும் சுமக்கும் ஆசிரியராகவும் நிறையவே அவரைக்காணவும் கிடைக்கிறது. ஆர்த்தெழும் பெண் குரல் என தோழி லறீனா

குறிப்பிட்டும்சொல்லி இருக்கிறார். சமீபத்தில் வாசித்திருக்கிறேன்,அவரின் "கடல் முற்றம்" கவிதை நூல் குறித்துப் பேசுகையில் ..

நால்வர், இந்நூல் பற்றி நேசத்தன்மையுடனும் சுமுக பாவத்துடனும், மிளிருகிறபுன்னகைகள் சிந்தியபடியும் அழகான கருத்துகள் சொல்லி இருக்கிறார்கள்.அவைகாத்திரமானஉரைகள் என்றாலும் நூலுக்கு அவை அதிகம் போல என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

பாயிஸா அலியை ஒரு சிறுவர் இலக்கியப் படைப்பாளியாக, ஒரு இலக்கிய விமர்சகி, சிறுகதை,பத்தி எழுத்தாளராக எல்லாம் பல் பரிமாண முகம் கொண்டவர் என வியந்து பார்த்திருக்கிறேன், மகிழ்ந்தும் அவரை, அவரின் வீச்சை பார்த்திருக்கிறேன். அழகு தான் எல்லாமும். என்னைப் பொறுத்தவரை கவிதை அவரின் உச்ச அழகு.

சம்பூரணமான ஒரு ரசானுபவத்தில்திளைத்து தான் பெற்ற அழகான, துயரமான, கேலியான நகைச்சுவையான எல்லாவகை உணர்வுக் கலவைகளையும் கலந்து நம்மிடம் பேசுகிறார்

பாயிஸா அலி. மாயாஜாலம் எதுவும் காட்டாத, உலுத்துப்போன சாயல் அறவே இல்லாத மிக எளிமையான இந்த எழுத்துகள் வெகுவிலும் வலிதானவை. ஆழமான ஒரு கவனத்தை மீளமீள செலுத்தி இருந்தால் எழுத்துப் பிழைகளை, பந்தியமைப்பின்போது வந்த தேவையற்ற உடைவுகளை, தேவையற்ற ஆங்கில சொல்லாடல்களின் கலப்புகளை நன்கு தவிர்த்திருக்க பாயிஸாவுக்கு முடிந்திருக்கும்.

– கெக்கிராவ ஸுலைஹா –

# வண்ண கனவுகளை விதைக்க வேண்டாம்!

மீசையை முறுக்கி விடு
நிமிர்ந்து நில்
வளைந்து கொடாதே
மயிர்க் கொட்டியே

நமக்கு எதுவும்
தேவையில்லை
உருமாற்றம் எதையும்
ஒத்துக் கொள்ளோம்

ஒரு வண்ணத்துப்
பூச்சியாய் விளைந்து
மற்றவர் மனங்களில்
வண்ணக் கனவுகளை
விதைக்க வேண்டாம்

மண்ணில் மரங்களுடன்
ஒட்டி வாழும்
ஒரு சின்னப்புழுவாய்
சிரித்திருந்தால் போதும்

நிமிர்ந்து நில்
வளைந்து கொடாதே

உயிரை நெருக்கி
உள்ளே நுழைந்து
மயிரும் இழந்து
மதிப்பும் இழந்து
இடம்பெயர்ந்தவர் போல்
குடம்பியின் உள்ளே
இருக்கும் நிலைதான்
நமக்கு எதற்கு

உன்னில் உள்ளதை
உலகம் அறியட்டும்
உன் கண்ணில்
உலகின் கானல்
மறையட்டும்

மீசையை முறுக்கி விடு
கம்பீரமாய் நட
கவலை எதற்கு
மயிர்க் கொட்டியே!

– எச்.ஏ. அஸீஸ் –

# பிரதேச கலை இலக்கிய போட்டிக்கான பரிசளிப்பு விழா!



(நிஷா)

கல்முனை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச கலை இலக்கிய போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் ரீ.எம். முஹம்மட் அன்சார் தலைமையில் கடந்த 2502.2025 அன்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மாரஸி அகடமியின் அனுசரணையில் கலாசார உத்தியோகத்தர் பௌசுல் ஹிபானா ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபராக சிந்தகே அபேவிக்ரம,விஷேட அதிதிகளாக மாவட்ட காலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான்,உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஜௌபர்,சிரேஷ்ட தலைமைபீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர். எம்.சாலி,சமுர்த்தி முகாமையாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸ், அதிபரும் எழுத்தாளரும் அதிபருமான எம். எச்.எஸ்.ஆர்.மஜீதியா,அதிபர் ஏ.கே.பாரிஸ், ,மற்றும் தலைமை முகாமை உத்தியோகத்தர் சனூபா நௌபல்,மற்றும் அதிபர்கள் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இப்போட்டியானது, பாலர் பிரிவு,சிறுவர் பிரிவு,கனிஷ்ட பிரிவு,சிரேஷ்ட பிரிவு,அதி சிரேஷ்ட பிரிவில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களுக்கானதும் மற்றும் திறந்த பிரிவில் போட்டியிட்டு வெற்றியீட்டிய கலைஞர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கிளீன் ஸ்ரீலாங்கா - கம்பளை புகையிர நிலையம்



(இக்பால் அலி)

இம்முறை பாதியீட்டில் கல்விக்காக அதிகளவிலான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக என்று தேசிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். எம். பஸ்மின் தெரிவித்தார்.

கம்பளை ஜினராஜ மகளிர் கல்லூரி பாடசாலையின் சாரணர் பிரிவு மாணவிகளினால் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் இன்று கம்பளை புகையிர நிலையத்தில் துப்புறவுப் பணிகள் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். எம். பஸ்மின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். எம். பஸ்மின் உரையாற்றும் போது இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

## மனநலமும் ஆலோசனையும் 74

# வீண்விரயமற்ற இப்தார்

ரமழான் மாதத்தில், சில தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள், வசதி படைத்தவர்கள் என பலரும் நோன்பு திறக்க இப்தார் ஏற்பாடுகள் செய்வதில் கவனம் செலுத்துவதை பார்க்கிறோம். இந்த ஏற்பாடுகளை ஆசையோடு செய்தாலும், ஆர்வத்தோடு மக்கள் பங்கேற்றாலும் இங்கு பரிமாறப்படும் உணவுகள் வீண்விரயமாகாமல் இருப்பதில் அவதானம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

இப்தார் விருந்துகளின் போது உணவு வீணாவது ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினை என்பதை சிலர் பொறுப்பெடுப்பதுமில்லை. கவலைப்படுவதுமில்லை.

நாம் எங்கு, யாருக்கு, எந்த வகையில் உணவளித்தாலும் "உணவு ஒரு அருள், அதை வீணாக்காமல் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்" என்பதை நினைவில் கொள்வது கட்டாயமாகும்.

இப்தாரின் போது உணவு வீணாவதைப் பற்றிய விரிவான பார்வை எங்களிடம் இருக்க வேண்டும். இப்தார் விருந்துகளில் உணவு வீணாக வழிவகுக்கும் காரணங்களை நாம் கண்டறிய வேண்டும்.

– ஆடம்பரமான இப்தார் விருந்துகள் குறிப்பிடத்தக்க உணவு வீணாவதற்கு வழிவகுக்கும், இது சுற்றுச்சூழல் மற்றும் ஆன்மீக நல்வாழ்வு ஆகிய இரண்டிற்கும் சவால்களை ஏற்படுத்தும்.

– பலர் பெரிய இப்தார் விருந்துகளை நடத்துகிறார்கள். இது பெரும்பாலும் கணிசமான அளவு உணவைத் தயாரித்து வழங்குவதை உள்ளடக்கியது, இதனால் அதிக அளவு மீதமுள்ளவை வீசப்படும்.

– சிலர் ரமலான் நாட்களை சமூகமயமாக்குவதற்கான சந்தர்ப்பங்களாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் குடும்பங்கள், ஊழியர்கள் மற்றும் நண்பர்களை இப்தாருக்கு அழைக்கிறார்கள். அவர்களை மகிழ்விக்க ரமழான் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் உணவு கட்டுப்பாட்டிட்கு எதிரான உணவு மெனுக்களை தயாரிக்கப்படுகின்றன.

– சிலர் பலவிதமான, கவர்ச்சியான உணவுகளை வழங்குவதை முக்கியமானதாகக் கருதுகின்றனர். இது அதிகப்படியான தயாரிப்பு மற்றும் வீணாவதற்கு நேரடியாக பங்களிக்கிறது.

– பலர் பிளாஸ்டிக் போத்தல்களில் இருந்து ஒரு மிடல் அல்லது இரண்டு மிடல் தண்ணீரை எடுத்துவிட்டு அப்படியே மேசையில் வைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். மேலும், பிளாஸ்டிக் பைகளில் கொடுக்கப்படும் உணவில் ஒரு பகுதியை உண்டுவிட்டு மீதம் வைப்பதையும் பார்க்கிறோம்.

– அதே நேரத்தில் இன்னும் சிலர் தங்களுக்குத் தேவையானதை விட அல்லது உட்கொள்ளும் அளவை விட அதிகமான உணவை தங்கள் தட்டுகளில் எடுத்துக்கொள்கிறார்கள்.

இறுதியில், இப்தார் விருந்துகளின் முடிவில் பெரிய அளவிலான உணவுக் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் சுற்றுச்சூழலுக்கு விடப்படுவதை காணலாம். இது நடைமுறைக்கோ, ஆன்மீக நல்வாழ்வுக்கோ நல்லதல்ல.

இப்தார் உணவு வீணாவதைக் குறைக்க என்ன செய்யலாம்

– முன்கூட்டியே திட்டமிட்டு துல்லியமாக மதிப்பிடுதல்.

ஒரு இப்தார் விருந்தை நடத்துவதற்கு முன், அதிகமாக வாங்குவதைத் தவிர்க்க எவ்வளவு உணவு தேவைப்படும் என்பதை யதார்த்தமான மதிப்பீட்டை உருவாக்குதல்.

– அதிகப்படியாகத் தயாரிக்காதிருத்தல்.

நியாயமாக, சாப்பிட எதிர்பார்க்கக்கூடியதை மட்டும் தயார் செய்தல்.

– மீதமுள்ள உணவை தானம் செய்தல்.

உணவு எஞ்சினால் அவற்றை தேவையுடையவர்களுக்கு அதாவது யாருக்கு நன்கொடையாக வழங்குவது என்பதை ஏற்கனவே தீர்மானத்தல்.

– விருந்தினர்களும் தாம் சாப்பிடக்கூடியதை அளவாக எடுத்தல், தட்டுகளில் அதிகமாகக் குவிப்பதைத் தவிர்த்தல்.

– ஆரோக்கியத்தையும் நிலைத்தன்மையையும் கருத்தில் கொண்டு முடிந்தவரை நேரத்துக்கு பொருந்தும் உணவுகளைத் தேர்வு செய்தல்.

உணவு ஒரு பரிசு, அதை வீணாக்காமல் பொறுப்புடன் பயன்படுத்துவது ஒரு தார்மீக கடமை என்பதை இப்தார் விருந்து கொடுப்பவரும் விருந்தில் பங்கேற்பவரும் நினைவில் கொள்ள வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**





பயாஸா பாஸில்

# ஒரு முறைதான்!

ஒரு முறைதான், ஒரே ஒரு முறைதான், உங்கள் உலகத்தை மாற்றக் கூடிய ஒருவரைச் சந்திப்பீர்கள். வேறு ஒருவரோடும் பகிர்ந்து கொள்ளாத விஷயங்களை அவர்களிடம் சொல்வீர்கள்.

நீங்கள் சொல்வது போலவே அவர்களால் உள்வாங்கவும் முடியும். உங்களை முழுதாகக் கேட்க விரும்புவார்கள். உங்கள் எதிர்காலம், நிறைவேறாத கனவுகள், எட்ட முடியாத சிகரங்கள், வாழ்க்கை உங்கள் மீது வீசிய கொடும் கற்கள் என அனைத்தையும் அவர்களிடம் கொட்டித் தீர்ப்பீர்கள். உங்கள் வாழ்வில் எது நடந்தாலும், அவர்களிடம் சொல்வதற்காகக் காத்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பரவசத்தில் அவர்களும் பங்கு கொள்வார்கள். உங்களோடு அழவோ, உங்கள் லூசுத்தனத்தைப் பார்த்து சிரிக்கவோ தயங்க மாட்டார்கள்.

உங்கள் உணர்ச்சிகளை அவர்களால் காயப்படுத்த முடியாது. உங்களை மதிப்பிட மாட்டார்கள். உங்களை வளர்த்தெடுக்க அனைத்தையும் செய்வார்கள். உங்களுக்கே தெரியாத உங்களை காண்பித்து, உங்களை அழகாக்குவார்கள். அவர்களின் அருகாமையில் ஒரு வித மன அழுத்தமோ பொறாமையோ இருக்காது.

காற்றில் அமைதியை தூவி இருப்பார்கள். அவர்கள் உங்களை உங்களாக நேசிப்பதால், நீங்கள் நீங்களாகவே இருக்கலாம் எதைப் பற்றியும் கவலை கொள்ள தேவையில்லை. ஒரு வார்த்தை, ஒரு பாடல், கை கோர்த்து நடந்த நொடிகள் மிகவும் முக்கியமானதை உங்கள் இதயத்தில் வாழும். உங்கள் சிறு வயது ஞாபகங்கள் தெளிவாக மனதில் அலையடிக்கும். நீங்கள் குழந்தையாக மாறுவீர்கள். வண்ணங்கள் அழகாகவும் பிரகாசமாகவும் தெரியும். அதுவரை எப்போதாவது இருந்த சிரிப்பு, உங்கள் வாழ்வில் தினசரி வாழ்வில் மறுக்க முடியாத மறக்க முடியாத ஒரு நிகழ்வாக மாறிவிடும். ஒரு நீண்ட நாளில், களைத்துப் போகும் நேரத்தில், அவர்களது ஒரு குறுஞ்செய்தி, ஒரு அழைப்பு உங்கள் முகத்தில் சிரிப்பை வர வைக்கும். அவர்களுடைய இருப்பு அழகான திருப்தியைத் தரும். அவர்களோடு பேச வேண்டும் என்ற அவசியமே இல்லை. உங்களுக்கு ஆர்வமில்லாத விஷயங்கள் கூட அவர்களுக்குப் பிடிக்கும் என்ற ஒரு காரணத்தால் உங்களை பரவசமாக்கும்.

உங்கள் நாளின் ஒவ்வொரு நொடியிலும், உங்களின் ஒவ்வொரு செயலிலும் இவரின் நினைவு இருக்கும். நீல வானம், தென்றல், புயல் போன்றவற்றில் அவரைக் காண்பீர்கள். உங்கள் இதயம் என்றேனும் ஒரு நாள் உடைக்கப்படலாம் எனத் தெரிந்தும் அதை அவருக்குக் கொடுப்பீர்கள்.

அப்படி கொடுப்பதில் எல்லையற்ற ஆனந்தத்தைக் கண்டடைவீர்கள். உடைந்து போகலாம் எனத் தெரிந்து பின்புதான் உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியும். உண்மையான மகிழ்ச்சி உங்களை பயம் கொள்ளச் செய்யும்.

ஒரு உண்மையான நட்பு, உங்களுக்கு உண்மையாக இருக்கும் ஒரு பாதியாக அவர் இருக்கிறார் என்ற எண்ணம் உங்களுக்குத் துணையாக இருக்கும்.


வாழ்க்கை வித்தியாசமானதாக மாறி விடுகிறது. பரவசமாக. மகிழ்வாக.

மதிப்புள்ளதாக. உங்களின் ஒரே நம்பிக்கை அவர்கள் உங்கள் வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்பதுதான்.

– பாப் மார்லே –



# மனைவியை நேசிப்போம்!



நான் காலையில்
படுக்கையிலிருந்து
எழும்புகிறேன்
நீ நெருப்புப் புகையோடு
போராடிக் கொண்டிருக்கிறாய்.

நான் பல் துலக்குகிறேன்
நீ பாத்திரங்களை
புதுப்பிக்கிறாய்.

நான் செய்தித்தாளில்
செய்திகளை சேகரிக்கிறேன்.
நீ வீட்டில் குப்பைகளை
பெருக்குகிறாய்.

நான் உடலை சுத்தம் செய்கிறேன்.
நீ ஆடைகளின் அழுக்குகளை
பிரித்துக் கொண்டிருக்கிறாய்.

நான் பசியாற வயிற்றை
நிரப்புகிறேன்.
நீ பாத்திரங்களை
நீரால் நிரப்புகிறாய்.

நான் அலுவலகம் கிளம்புகிறேன்.
நீ பிள்ளைகளை
சீருடையில் அனுப்பி விட்டு
என்முறைக்காக காத்திருக்கிறாய்.

நான் இரவு வீடு திரும்புகிறேன்.
நீ இன்னும் திரும்பவில்லை
சமையலறையிலிருந்து.

நான் தூங்கச்செல்கிறேன்.
நீ கதவின் தாழ்ப்பாள்களையும்
எரியும் மின்விளக்குகளையும்
பிள்ளைகளின் போர்வைகளையும்
சரிபார்த்து விட்டே
படுக்கையில் விழுகிறாய்.

ஒவ்வொரு ஞாயிறுகளும்
ஒவ்வொரு பண்டிகைகளும்
எங்களுக்கு ஓய்வு நாட்கள்
உனக்கு?

உறவு வீட்டு விழாக்களில்
எங்களிடத்தில் நீ!

கல்விக்கூடங்களின்
கேள்விகளுக்கான பதில் நீ!

சோக நிகழ்வுகளிலும்
கண்ணீர் சிந்திய படி நீ!

எங்களின் பிரதிநிதியாக
கோவில்களிலும் நீ!

என் வாழ்க்கைத்தோழியே!
இப்போதெல்லாம்
"நான் வேலைச்செய்கிறேன்""
என்று சொல்லவே
தயக்கமாக இருக்கிறது
கழிந்தப் பொழுதின்
உன் ஒற்றைப் பதிலால்..

புள்ளிவிபரம் சேகரிக்க வந்த
அரசு ஊழியர் உன்னிடம்
கேட்டார்
"வேலைப் பார்க்கிறீர்களாமா?"
உன் பதில்..
"இல்லங்க... நான் வீட்டில
சும்மாதான் இருக்கிறேன்.."

– நபீல் அபாபீல் –

# மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து அவர்களின் மனங்களில் வாழ்பவனே தலைவன்










■ வாஹிட் எம் ஜெஸீல்

இலங்கையின் 2025ம் ஆண்டிற்கான உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட இருக்கின்ற இந்த வேளையில் அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தின் பேசு பொருளாக அமைந்திருக்கின்ற திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தை மையமாகக் கொண்டு இயங்குகின்ற நாபீர் பவுண்டேஷன் எனும் சமூகசேவை அமைப்பின் பக்கம் எமது பார்வையை திருப்புகின்றோம். நாபீர் பவுண்டேஷன் நிறுவனர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் அவர்களுடனான நேர்காணலை உங்களுக்காக தருகின்றோம்.

**கேள்வி : அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற நாபீர் பவுண்டேஷன் எனும் சமூகசேவை அமைப்பானது அரசியல் களத்தில் ஒரு பேசு பொருளாக அமைந்திருக்கின்றது இதற்கான காரணம் என்ன?**

பதில் : ஆரம்ப காலத்தில் இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வந்த தேசிய கட்சிகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களிடையேயும் வேரூன்றி இருந்தது. இதன் போது மக்களுக்கு நடைபெற்ற அநீதிகளை தட்டிக் கேட்கவும் அரசியலில் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் தமிழ் முஸ்லிம் சிறுபாண்மைக் கட்சிகள் உருவாகி இருந்தன. அவ்வாறு உருவாக்கப்பட்ட சிறுபாண்மைக் கட்சிகள் இடையே காணப்பட்ட குறைகளின் காரணமாக மக்களின் தேவைகள் சரிவர பூர்த்தி செய்யப்படவில்லை. இதனை அடிப்படையாக வைத்து 1989 ஆம் ஆண்டு ஐக்கிய இளைஞர் முன்னணி என்ற ஒரு அரசியல் அமைப்பினை உருவாக்கி அதனூடாக மக்களுக்கான சில அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்து வருகின்ற காலகட்டத்தில் 1991 ஆம் ஆண்டு இதனை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் பல முன்னெடுப்புகளை மேற்கொண்ட போது அரசின் சில சட்ட திட்டங்கள் அதற்கு முட்டுக்கட்டையாக அமைந்து காணப்பட்டது. அதன் பின்னர் அதனை கைவிட்ட மறுகணமே1993 ஆம் ஆண்டு நபீர் பவுண்டேஷன் நற்பணி மன்றம் ஒன்றினை எனது பெயரிலேயே ஆரம்பித்தேன். அது ஊடாக கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வாழ்வாதாரம், விளையாட்டு மற்றும் மூவின மக்களின் சமயத்தலங்களுக்கான தேவைகள் அனைத்துமே நிவர்த்தி செய்யப்பட்டது. கடந்த இரண்டு தசாப்தங்களாக பல சிறுபாண்மைக் கட்சிகள் சமூகத்தில் உருவெடுத்து இருந்தாலும் அவை அனைத்துமே கட்சித் தலைமைகளின் வியாபாரங்களை நோக்கமாகக் கொண்டவையாகவே அமைந்து காணப்பட்டது. ஒரு பிரதான சிறுபான்மை கட்சியிலிருந்து பல சிறு சிறு கட்சிகள் உருவாவதற்கு இதனால் மக்களிடையே ஏற்பட்ட அதிருத்தியே காரணம் என்பதை அரசியல் ஆய்வாளர்களும் குறிப்பிடாமலில்லை.

**கேள்வி : எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நாபீர் பவுண்டேஷன் நிறுவனராகிய உதுமான்கண்டு நாபீர் ஆகிய நீங்கள் எந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்துதேர்தலை எதிர்நோக்க இருக்கின்றீர்கள்?**

பதில் : எமது நிறுவனமாகிய நாபீர் பவுண்டேஷன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மாத்திரம் அடிப்படையாக வைத்து களமிறங்கவில்லை மாறாக எதிர் வருகின்ற காலங்களில் எதிர்கொள்ள இருக்கின்ற அனைத்து தேர்தல்களிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் அதேபோன்று பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் போட்டியிடுவதற்கு நாங்கள் கடந்த ஒரு தசாப்த காலமாக முடிவினை மேற்கொண்டு கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது சம்மாந்துறை பிரதேச சபையிலும் திகாமடுல்ல மாவட்டத்தை மையமாகக் கொண்ட ஏனைய பிரதேச சபைகளிலும் சுயேச்சை குழு ஊடாக நாங்கள் போட்டியிட்டோம். அதில் போட்டியிடுவதற்கு பிரதான காரணம் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அம்பாறை மாவட்டத்தின் சிறுபான்மை கட்சிகள் தேர்தல்களில் போட்டியிட்டு தாங்கள் சபைகளை கைப்பற்றி அதிகாரங்களுக்கு வந்த போதிலும் குறித்த கட்சிகளின் தலைவர்களுக்கு மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றினை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது தொடர்பில் அனுபவங்களும் அவற்றுக்கான திட்ட வரைவுகளும் இல்லாமையே காரணம் என குறிப்பிடலாம். கல்முனை மாநகர சபை, சம்மாந்துறை பிரதேச சபை, அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, அட்டாளச்சேனை பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, காரைதீவு பிரதேச சபை, நாவிதன்வெளி பிரதேச சபை இறக்காமம் பிரதேச சபை மற்றும் பொத்துவில் பிரதேச சபை போன்ற உள்ளூராட்சி மன்றங்களில் தெரிவு செய்யப்பட்ட சிறுபான்மை கட்சிகளின் தலைவர்களால் எமது மக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படாமல் தொடர்ச்சியாக மக்கள் ஏமாற்றத்துக்குள்ளாகி வருகின்ற ஒரு சூழல் காணப்படுகின்றது. இந்தத் தலைமைகள் பழைய குட்டைகளில் மீன் பிடித்தது போன்றே முன்னர் இருந்த தலைமைகள் செய்தவற்றை அடிப்படையாகக் கொண்டு சென்றார்களே தவிர காலத்திற்கு ஏற்றவாறு நவீன யுக்திகளை அடிப்படையாக வைத்து இவர்கள் அரசியலின் மூலமாக வேலை திட்டங்கள் பலவற்றை செய்து அவற்றின் ஊடாக மக்களின் சுமைகளை குறைப்பதற்கு உரிய வேலைத்திட்டங்கள் இவர்களிடம் இல்லை. இதற்காக நாபீர் பவுண்டேஷன் தெளிவான திட்ட வரைவுகளை முன்வைக்கின்றது. உதாரணமாக சம்மாந்துறை பிரதேச சபையை நாங்கள் எடுத்துக் கொண்டால் அதன் எல்லைக்குள் காணப்படுகின்ற வளங்களை அடிப்படையாக வைத்து எவ்வாறான வேலைத் திட்டங்களை நாம் முன்னெடுக்கலாம்? அந்த மக்களுடைய வாழ்வாதார சுமையை எவ்வாறு குறைக்கலாம்? என்பனவற்றை உள்ளூர் மட்டத்தில் நாம் சிந்தித்து செயல்பட முற்படுகின்ற போதுதான் அந்த மக்களுக்கு உரிய தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும். இதில் தேசிய அரசாங்கத்தை குறை கூறுவதில் எந்த அர்த்தமும் இல்லை. உள்ளூர் வளங்களை பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து தொழில்நுட்ப ரீதியாக முன்னெடுப்புகளை செய்கின்ற தலைமைகளை தெரிவு செய்ய மக்கள் முன்வர வேண்டும்.

**கேள்வி : ஆரம்பத்தில் சிறுபாண்மைக் கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாலட்டதில் ஆதிக்கம் செலுத்தி இருந்த போதும் தற்போது தேசிய கட்சியின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படுவது போன்று தெரிகிறதே இந்த சவாலை நீங்கள் எதிர் நோக்குவதற்காக எவ்வாறான வியூகங்களை வகுத்துள்ளீர்கள்?**

பதில் : நிச்சயமாக இதனை நான் ஒரு பாரிய சவாலாக எதிர்கொள்ளவில்லை. குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்களுக்கு இருந்த தற்காலிக மாற்றுத் தெரிவாகவே இதனை நான் பார்க்கின்றேன். சிறுபாண்மைக் கட்சிகளை 100மூ வெறுத்து ஒதுக்கிய இளைஞர் யுவதிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு சிறுபாண்மைக் கட்சிகள் நடந்து கொள்ளவில்லை. ஏற்கனவே நான் கூறியது போன்று 100மூ வியாபாரத்தை நோக்கமாகக் கொண்டு இந்தத் தலைமைகள் செயற்பட்டு வந்ததன் காரணமாகவே மக்கள் இந்த சிறுபாண்மைக் கட்சிகளை வெறுத்தொதுக்குகின்ற சூழல் உருவானது. அதற்கு மாற்றீடான கட்சியாகவே தேசிய மக்கள் சக்தியினை மக்கள் நோக்கினர். இது ஒரு நிரந்தர தீர்வு அல்ல. அந்த சந்தர்ப்பத்தில் நாபீர் பவுண்டேஷன் களமிறங்கி இருந்தால் அதிகப்படியாக இளைஞர் யுவதிகள் எங்களுக்கு ஆதரவு தெரிவித்து இருப்பார்கள். மக்களை சந்திக்கின்ற போது மக்களின் அங்கலாய்ப்பின் மூலமாக இதை நான் புரிந்து கொண்டேன். தற்போது உள்ள சூழலில் எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் சிறுபான்மை கட்சிகளுக்கும் நாபீர் பௌண்டேஷனுக்கும் இடையே போட்டி நிலவுமே தவிர தேசிய கட்சியின் ஆதிக்கம் வெகுவாக குறைந்துவிடும் என்பது எனது கருத்து.

**கேள்வி : எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்து வாழுகின்ற பிரதேசங்களில் போட்டியிடுவது சம்பந்தமாக உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : நாபீர் பவுண்டேஷனானது இன, மொழி, மத ரீதியாக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு அல்ல, நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்த சமூகமே எமது பிரதேசமாக காணப்படுகின்றது. அனைவரும் மனிதர்கள் என்ற ரீதியில் வெவ்வேறு தேவைகளுடையவர்களாகவே காணப்படுகின்றார்கள். அந்த அடிப்படையில் அனைத்து மக்களையும் அரவணைத்து கடந்த 32 வருடங்களாக நாங்கள் மக்கள் சேவையில் நடைபோட்டுக் கொண்டிருக்கின்றோம். என்னுடைய சிந்தனை எல்லா மக்களும் ஒரு குடையின் கீழ் பயணிக்க வேண்டும் என்பதே. அந்த அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக காரைத்தீவு பிரதேச சபையை எடுத்து நோக்குகின்ற போது எம்முடைய தமிழ் முஸ்லிம் சகோதரர்கள் ஒன்று சேர்ந்து அந்த சபை அமைக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக பெரும்பான்மையாக தமிழ் சகோதரர்கள் அந்த சபையில் இருக்கின்றார்கள். எனவே தான் இவற்றை மையமாகக் கொண்டு தமிழ் வேட்பாளர்களையும் நாங்கள் களத்தில் இறக்கவிருக்கின்றோம்.

**கேள்வி : கிளீன் ஸ்ரீலங்கா ஊடாக ஊழலற்ற இலங்கை எனும் தொனிப்பொருளில் ஆட்சிக்கு வந்திருக்கின்ற தேசிய மக்கள் சக்தியினதும் சிறுபான்மைக் கட்சிகளை மக்கள் வெறுத்து ஒதுக்கி இருக்கின்ற காரணமும் அதுவாகத்தான் பார்க்கப்படுகின்றது எனவே இது தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

பதில் : தற்போது புதிதாக ஆட்சிக்கு வந்த கட்சியின் கொள்கை ஊழலற்றதாக காணப்பட்டாலும் கடந்த 32 வருடங்களாக நாங்கள் ஊழல் அற்றசமுதாயத்தை உருவாக்க வேண்டும். எனவே நாங்கள் தொன்றுதொட்டு கூறி வருகின்ற விடயம் ஊழலற்ற ஒரு அரசியலை உருவாக்க வேண்டும். எங்கு ஊழல் காணப்படுகின்றதோ அந்த இடம் குப்பையாக மாறிவிடும் எனவே குப்பைகள் இல்லாத ஊழல்கள் இல்லாத சமுதாயத்தின் ஊடாக அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதை எமது நீண்டகால கொள்கையாக காணப்படுகின்றது. இஸ்லாம் மார்க்கமும் அதனைத்தான் கூறுகின்றது.. எந்த ஒரு விடயத்தை நாங்கள் அனுபவிக்கின்ற போதும் அதனை நாங்கள் ஹலாலாக அனுபவிக்க வேண்டும் என்பதே இஸ்லாம் மார்க்கத்தின் கொள்கையாகும் அதனை நாங்கள் அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்ற போது அங்கே ஊழலுக்கு இடமில்லாமல் போகின்றது. அதற்கு இப்பொழுது இருக்கின்ற அரசாங்கம் உதாரணமானதாகவும் 100மூ பொருத்தமானதாகவும் காணப்படுகிறது. ஏனென்று சொன்னால் கடந்த காலங்களில் காணப்பட்ட ஆட்சியாளர்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஊழல்களினாலுமே இந்த நாடு மிகவும் பொருளாதாரத்தில் அதள பாதாளத்திற்கு சென்றது. ஆனால் தற்போது புதிதாக ஆட்சியினை ஏற்றுக்கொண்ட அரசாங்கமானது ஊழலற்ற அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் என்பதை முனைப்பாகக்கொண்டு செயறற்பட்டு வருகின்றது. அவர்களுக்கு பக்கபலமாக நாங்களும் இருக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

**கேள்வி : பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்த காலகட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையானது அதிகரித்தும் ஏனைய பொருட்களின் தட்டுப்பாடும் நிலவுகின்ற இந்த காலகட்டத்தில் இந்த பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் மக்கள் தேசிய அரசியல் மற்றும் சிறுபாண்மைக் கட்சிகள் ஊடாக அதிர்ப்தி அடைந்துள்ள நிலையில் மக்கள் மாற்றங்களை எதிர்பார்க்கின்றார்களா? அது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

பதில் : பொருளாதார நெருக்கடி என்பது ஒட்டுமொத்தமாக தேசிய ரீதியாக அனைத்து மக்களுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சனையாகும். இந்த பொருளாதார நெருக்கடி சம்பந்தமாக எடுத்த மாத்திரத்தில் நாங்கள் எமது கருத்துகளை கூறிவிட முடியாது. குறித்த பெரும்பாண்மைக் கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வந்திருந்த போதும் தற்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆனது புதிதாகஆட்சியினை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் பொருளாதார நெருக்கடியினை அந்த கட்சி எதிர்நோக்கி இருக்கின்றது. இது கடந்த காலங்களில் ஆட்சியில் இருக்கின்ற ஆட்சியாளர்கள் செய்த ஊழல் மூலமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி என்பது குறிப்பிடத்தக்க விடயம். அதனை எடுத்த மாத்திரத்திலே சீர் செய்து விட முடியாது. அதற்காக தற்போது ஐ எம் எப் உதவியும் நாடப்பட்டு அதன் உதவிகளும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைத்து கட்சிகள் அனைத்து மக்களும் பாடுபட வேண்டும். அதற்காக குறித்த ஆட்சியில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு அவகாசம் வழங்கப்படுகின்ற போதுதான் நாட்டின் பொருளாதாரத்தை ஒரளவேணும் நிமிர்த்த முடியும். நாங்கள் குறிப்பிட்டது போன்று இந்த ஆளும் கட்சிக்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்ற போது தான் குறித்த பொருளாதார பிரச்சினையை சீர்செய்ய முடியும். மாறாக உடனடியாக இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்ப்பதும், அதற்காக அரசுக்கு எதிரான செயற்பாடுகளை தூண்டும் விதமாக சிறுபாண்மைக் கட்சிகள் செயற்படுவதும் ஆரோக்கியமற்றதொரு விடயமாக காணப்படுகின்றது.

**கேள்வி : எதிர்கால அரசியலில் உங்கள் கொள்கைகளுடன் சார்ந்து வருகின்ற சிறுபாண்மைக் கட்சிகள் அல்லது உங்கள் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கின்ற தேசிய கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் களமிறங்குகின்ற சந்தர்ப்பங்கள் உங்களுக்கு கிடைக்கின்ற போது அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு எவ்வாறானதாக அமையக்கூடும்?**

பதில் : குறித்த இந்த விடயத்தில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம். ஏனென்றால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் என்பது சிறுபாண்மைக் கட்சிகளின் தலைமைத்துவத்தின் கீழ் அவர்களின் கொள்கையின் பின்னால் இயங்கக்கூடிய ஒரு விடயம் அல்ல. நாங்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றியீட்டுகின்ற பட்சத்தில் சபையில் தெரிவு செய்யப்படுகின்ற சக உறுப்பினர்களுடைய ஆதரவின் ஊடாக எமது பிராந்தியத்தில் உள்ள வேலைகளை முன்னெடுத்துச் செல்வதே எமது நோக்கம். இதற்கு நாங்கள் சிறுபாணண்மைக் கட்சிகளுடன் கூட்டுச்சேர வேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. தேசிய ரீதியான கட்சிகளுடன் தேசிய ரீதியாக எதிர்கொள்கின்ற தேர்தல்களில் தேசிய கட்சிகளுடன் இணைவதா இல்லையா என்பது தொடர்பாக நாங்கள் பின்னர் சிந்திக்கின்ற நிலைப்பாட்டில் தான் இப்பொழுது உள்ளோம். தற்பொழுது நாங்கள் சிந்திப்பது உள்ளூர் மட்ட உற்பத்தியாளர்கள் உள்ளூர் மக்களின் தேவைகள் அவர்கள் தொடர்பான அபிவிருத்திகள் அவற்றை இனம் கண்டு நாங்கள் நிவர்த்தி செய்வதன் ஊடாக தேசிய அரசியலுக்கு நாங்கள் செல்லுகின்ற போது அவற்றை இலகுவாக எதிர் கொள்ள முடியும். அதற்காக நாங்கள் எதிர்பார்ப்பது உள்ளூராட்சி மன்றங்களில் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சி பேதம் பாராது அந்த பிராந்தியத்தை அல்லது அந்த பிரதேசத்தை அவற்றின் அபிவிருத்தி கேட்டுச் செல்லுகின்ற போது தேசிய அரசாங்கம் அதற்கு பக்கபலமாக இருக்கும் என்பதை நாங்கள் நம்புகின்றோம். அந்த அடிப்படையில் தான் எதிர்கால அரசியலை நாங்கள் எதிர் நோக்குவோம் என்பதை உறுதியாக கூற முடியும்.

**கேள்வி : இறுதியாக எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்நோக்கி இருக்கின்ற மக்களுக்காக நீங்கள் கூற இருப்பது என்ன?**

பதில் : எதிரே வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சி வேறுபாடுகளை மறந்து நேர்மையாக அரசியலை செய்யக் கூடியவர்களுக்கு எமது பிரதேசங்களை அபிவிருத்தியின்பால் முன்னோக்கி கொண்டு செல்லக் கூடியவர்களுக்கு எமது சமூகத்தில் காணப்படுகின்ற வறுமையினை இல்லாது ஒழிக்க பாடுபடுபவர்களுக்கு எமது பிரதேச இளைஞர் யுவதிகள், கல்வியலாளர்கள், அரசியலில் முதிர்ந்தவர்கள், விவசாயிகள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், மத போதகர்கள் என அனைவரும் ஒருமித்து இந்த சபைகளை வென்றெடுப்பதற்கு முன்வர வேண்டும். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை புதியவர்களுக்கு வழங்க வேண்டும். தற்போதுள்ள புதிய அரசாங்கம் மக்கள் எழுச்சி ஊடாக வருகை தந்தது போன்று அனைத்து சபைகளையும் புதியவர்கள் வெற்றி பெறுவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும். இன்ஷா அல்லாஹ் மக்கள் எதிர்பார்ப்பது போன்று எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாங்கள் போட்டியிடுகின்ற உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் அனைவரும் எங்களுக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. இருந்த போதும் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலை கட்சிகளுக்கு ஏஜெண்டுகளாக தொழில்படுகின்றவர்களுக்கு பாடம் புகட்டுகின்ற ஒரு தேர்தலாக மக்கள் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

சமகால அரசியல் மற்றும் அபிவிருத்தியில் குறித்து என்னுடன் கலந்துரையாடி எனது கேள்விகளுக்கு தெளிவான விளக்கங்களைத் தந்த கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற நாபீர் பவுண்டேஷன் நிறுவனர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் அவர்களுக்கு எமது பத்திரிகை சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறோம்.



அரபாத் பஹர்தீன்



# சமரியின் அதிரடியால் நியூசிலாந்தை வீழ்த்தியது இலங்கை

சுற்றுலா இலங்கை மகளிர் அணிக்கும் நியூசிலாந்து மகளிர் அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரின் முதல் போட்டியில் சமரி அத்தபத்துவின் பொறுப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க 7 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்ற இலங்கை மகளிர் அணி தொடரில் 1:0 என முன்னிலை வகிக்கிறது.
நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ரி20 ஆகிய தொடர்களில் பங்கேற்றுள்ளது. இதில் முதலில் நிறைவுற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை நியூசிலாந்து மகளிர் அணி 2:0 என கைப்பற்றி இருந்தது.
இந்நிலையில் நேற்று முன்தினம் (14) கிறிஸ்சேர்ச்சில் இடம்பெற்ற முதல் ரி20 போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து மகளிர் அணி துப்பாட்டத்தை தேர்வு செய்தது.
அதற்கமைய துடுப்பெடுத்தாடிய நியூஸலாந்து மகளிர் அணி 18.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.
துடுப்பாட்டத்தில் எம்மா மெக்லியோட் 44 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மல்கி மடாரா 3 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.
பின்னர் 102 என்ற இலகு வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய இலங்கை மகளிர் அணிக்கு அணியின் தலைவியும், ஆரம்பத் துடுப்பாட வீராங்கனையுமான சமரி அத்தபத்து 64 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் விளாசிக் கொடுக்க 14.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்று கொள்ள 7 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்ற இலங்கை மகளிர் அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது. பந்துவீச்சில் ஜெஸ் கேர் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். போட்டியின் நாயகியாக சமரி அத்தபத்து தெரிவாக, 2ஆவது போட்டி இன்று (16) இடம்பெறவுள்ளது.

## சர்வதேச மாஸ்டர்ஸ் ரி20:

# அரையிறுதியில் தோற்று தொடரிலிருந்து வெளியேறியது இலங்கை




சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி20 தொடரில் நேற்று (14) இடம்பெற்ற 2ஆவது அரையிறுதிப் போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி 6 ஓட்டங்களால் போராடித் தோல்வியடைய, மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணி இந்திய மாஸ்டர்ஸ் அணியை இறுதிப் போட்டியில் சந்திக்க உள்ளது.
சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி20 தொடரில் மொத்தம் 6 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் இலங்கை மாஸ்டர்ஸ் அணியை முன்னாள் நட்சத்திர வீரரான குமார் சங்கக்காரா வழிநடாத்துகின்றார். மேலும் இத் தொடரின் முதல் சுற்றில் ஒரு அணி மற்றைய 5 அணிகளுடனும் தலா ஒரு முறை போட்டியிட வேண்டும்.
பின்னர் புள்ளிப் பட்டியலில் முதல் 4 இடங்களைப் பெறும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெற்று பின்னர் இறுதிப்போட்டியில் இரு அணிகள் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.
இந்நிலையில் லீக் சுற்றில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி தாம் பங்கேற்ற 5 போட்டிகளில் 4 வெற்றிகளைப் பெற்று முதலிடத்தினை தனதாக்கியது. மேலும் இந்திய மாஸ்டர்ஸ் அணி 2ஆம் இடத்தையும், அவுஸ்திரேலிய மாஸ்டர்ஸ் அணி 3ஆம் இடத்தையும், மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணி 4ஆம் இடத்தையும் பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.
அதற்கமைய கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய மாஸ்டர்ஸ் அணியை மிக இலகுவாக வீழ்த்திய இந்திய மாஸ்டர்ஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. பின்னர் 2ஆவது அரையிறுதிப் போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி ராய்பூரில் வைத்து மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணியை எதிர்கொண்டது.
இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை மாஸ்டர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணிக்கு தினேஷ் ராம்டீன் ஆட்டமிழக் காமல் 50 ஓட்டங்களையும், பிரைன் லாரா 41 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.
பந்துவீச்சில் அசேல , ஜீவன் மற்றும் பிரதீப் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தினர்.
பின்னர் சவால் மிக்க 180 என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை மாஸ்டர்ஸ் அணிக்கு அசேல குணரட்ன பொறுப்புடன் ஆடி 66 ஓட்டங்களையும், உபுல் தரங்க 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்த போதிலும், ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் பிரகாசிக்கச் தஸறியமையால் இலங்கை மாஸ்டர்ஸ் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. இதனால் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணி இன்று (16) இந்திய மாஸ்டர்ஸ் அணியை இறுதிப் போட்டியில் சந்திக்கும் தகுதியைப் பெற்றுக் கொண்டது.
மேற்கிந்தியத் தீவுகள் மாஸ்டர்ஸ் அணி சார்பில் பந்துவீச்சில் டினோ பெஸ்ட் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



# பீபா கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ணம் சம்பியன் அணிக்கு 1 பில்லியன் அமெரிக்க டொலர் பரிசு

பீபா கிளப் உலகக்கிண்ண தொடர் எதிர்வரும் ஜுன் 14 முதல் ஜுலை 15 வரை அமெரிக்காவில் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடரின் பரிசுத் தொகையாக 1 பில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளது.
இந்த போட்டியில் 32 அணிகள் கலந்து கொள்ளளும் நிலையில் வெற்றிபெறும் அணிக்கான பரிசுத்தொகை மற்றும் மற்றும் யார் யாருக்கு எவ்வளவு என்பது குறித்த விபரங்கள் அறிவிக்கப்படவில்லை.
அணிகளின் செயல்திறன் அடிப்படையில், பரிசுத்தொகை வழங்கப்படும் என கூறப்படுகிறது.
இதற்கான உலகளாவிய ஒளிபரப்பு உரிமையை லண்டனை தளமாக கொண்ட நிறுவனம், இதே அளவிலான தொகைக்கு கைப்பற்றியுள்ளது. இதன் 63 போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை மூலம், 500 மில்லியன் டொலர் அளவுக்கு வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
"போட்டியின் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானமும், பங்கேற்கும் கழகங்களுக்கும், உலகம் முழுவதும் உள்ள கழக ஒற்றுமை மூலமாகவும் பகிர்ந்தளிக்கப்படும்" என பீபா தலைவர் கியானி இன்பான்டினோ தெரிவித்துள்ளார்.
மேலும் 2028ஆம் ஆண்டு மகளிர் கிளப் உலகக்கிண்ணம் நடத்தப்படும் என அறிவித்துள்ளார்

## பீபா நட்புறவு உதைப்பந்தாட்டம்:

# பலமிக்க லாவோஸை எதிர்த்தாடவுள்ள இலங்கை




இலங்கை உதைப்பந்தாட்ட அணிக்கும் லூவோஸ் உதைப்பந்தாட்ட அணிக்கும் இடையிலான நட்புறவு உதைப்பந்தாட்டப் போட்டியின் முதல் ஆட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி இடம்பெறவுள்ளது.
சர்வதேச உதைப்பந்தாட்டப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் நாடுகளுக்கிடையிலான நட்புறவு உதைப்பந்தாட்டப் தொடரின் அங்கமாக இலங்கை உதைப்பந்தாட்ட அணி பலமிக்க லாவோஸ் உதைப்பந்தாட்ட அணியை எதிர்கொள்கிறது. இதில் முதல் லெக் ஆட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி லாவோஸில் உள்ள தேசிய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப் போட்டி இலங்கை நேரப்படி 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
மேலும் இப் போட்டியில் பங்கேற்கவுள்ள சுஜான் பெரேரா தலைமையிலான இலங்கை உதைப்பந்தாட்ட அணி நாளை (16) லாவோஸ் நோக்கி பயணமாகவுள்ளதுடன் அங்கு 3 நாட்கள் பயிற்சியை மேற்கொண்ட பின்னர் 20ஆம் திகதி போட்டியில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இடம்பெறப்போகும் தெற்காசிய உதைப்பந்தாட்டத் தொடர்







ஜுன் இல் நடைபெறவிருக்கும் 2025 தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு (SAFF) சம்பியன்ஷிப்பை நடத்தும் உரிமை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.
இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (FFSL) தலைவர் ஜஸ்டர் உமரின் முறை-றயான கோரிக்கையைத் தொடர்ந்து தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு உறுப்பு நாடுகளால் இந்த தனித்துவமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
இலங்கை கடைசியாக 2008 ஆம் ஆண்டு தெற்காசிய கால்பந்து கூட்டமைப்பு சம்பியன்ஷிப்பை நடத்தியது.
17 வருட நீண்ட காத்திருப்புக்குப் பிறகு, "தெற்காசியாவின் உலகக் கிண்ணம்" என்று கருதப்படும் இந்தப் போட்டியில் பங்கேற்க இலங்கைக்கு மீண்டும் வாய்ப்பு கிடைக்கும்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.